பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | மார்கழி 04 | புதன்கிழமை 19.12.2018 | கதிர் 44

### இனி இது ரகசியம் அல்ல!

நேற்று நாடாளுமன்றத்தில் சுமந்திரன் அடித்த ஆப்புக் குறித்து சிங்கள எம்.பிக்கள் மட்டத்திலும் அதிகம் பேசப்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷவின் எதிர்க் கட்சித் தலைவர் பதவியை மட்டு மல்ல, நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கும் கூட ஆப்பு வைக்கும் விதத்தில் சட்டத் பக்கம் 02

# எதிர்க்கட்சித் தலைவரானார் மஹிந்த கூட்டமைப்பு, ஐ.தே.க., மு.கா. எதிர்ப்பு

## வெள்ளியன்று சபாநாயகரின் முடிவு



கொழும்பு, டிசெ.19

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார் என சபாநாயகர் நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்ற மரபுகளுக்கு அமைய, அதிக ஆசனங்களைக் கொண்ட எதிர்க்கட்சி என்ற வகையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த மஹிந்த ராஜபக்ஷ எம்.பியை பக்கம் 11

# இறுதித் தீர்மானம் வரும் வரைக்கும் சம்பந்தனே எதிர்க்கட்சித் தலைவர்!

## சுமந்திரன் எம்.பி. விடாப்பிடி



கொழும்பு, டிசெ.19

எதிர்க்கட்சித் தலைவர் பதவி விவகாரம் தொடர்பில் இறுதித் தீர்மானம் வரும் வரைக்கும் அப்பதவியில் இரா.சம்பந்தனே அமர்ந்திருப்பார்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் உறுதிபடத் தெரிவித்தார். பக்கம் 11

## புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கிறது

### சட்டம், ஒழுங்கு அமைச்சு இழுபறியில்!

கொழும்பு, டிசெ.19

புதிய அமைச்சரவை இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்பாக பதவியேற்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக பக்கம் 11

## ஆளும் கட்சிக்குத் தாவினர் சு.கவின் மூன்று எம்.பிக்கள்

கொழும்பு, டிசெ.19

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் நேற்று ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் இணைந்துகொண்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் பக்கம் 11

## வடமராட்சி கிழக்கி வயோதிபர் கடத்தல்!

### சிப்பாய்கள் உட்பட நால்வர் சிக்கினர் மூன்று பேர் தப்பித் தலைமறைவாகினர்

யாழ்ப்பாணம், டிசெ. 19

வடமராட்சி கிழக்கு-கோவில் பகுதியில் முதியவா ஒருவரை கடத்திய இராணுவச் சிப்பாய்கள் உட்பட 7 போ பொதுமக்களால் மடக்கப்பட்டபோது 3 பக்கம் 11

### '19' ஆல் ரணிலுக்கு நெருக்கடி

## அமைச்சுப் பதவிகளை ஏற்காதிருக்க மனோ, ரிஷாத், மலிக் சுயமாக முடிவு

கொழும்பு, டிசெ. 19

புதிய அரசில் அமைச்சுப் பதவிகளை ஏற்காதிருப்பதற்கு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் பக்கம் 11

## முல்லைக் கடற்கரையில் ஒதுங்கியது புலிக்கொடி!



முல்லைத்தீவு, டிசெ.19

முல்லைத்தீவு செல்வபுரம் கடற்கரைப் பகுதியில் தமிழீழ தேசிய கொடியான புலிக்கொடி ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டது. அது பக்கம் 11

## என்.எம்.பெரேரா எழுப்பிய கேள்விக்கு 40 ஆண்டுகளின் பின் பதில் கிடைத்தது

### மைத்திரிபாலவைச் சாடியது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ. 19

நிறைவேற்று அதிகார ஆசனத்தில் பைத்தியக்காரன் ஒருவன் அமர்ந்தால்நிலைமைஎன்னவாகும் என அன்று என்.எம்.பெரேரா எழுப்பிய கேள்விக்கு நாற்பது ஆண்டுகளின் பின்னர் மைத்திரி பால சிறிசேன பக்கம் 11

## சம்பந்தனுக்குப் புன்சிரிப்பு சுமந்திரனுக்குக் கைலாகு!

### சபையில் பெருந்தன்மையுடன் நடந்தார் மஹிந்த

கொழும்பு, டிசெ.19

நாடாளுமன்ற அமர்வு நேற்று நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பக்கம் 11

## ஐ.தே.க. பக்கம் தாவியோருக்கு அமைச்சுப் பதவி கிடையாது!

### சு.க. மத்தியக்குழுவில் அதிரடி முடிவு

கொழும்பு, டிசெ. 19

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானத்தை மீறும் வகையில் ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கு ஆதரவளித்துள்ள கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படக்கூடாது என சு.கவின் பக்கம் 11

## சட்டம், ஒழுங்கு அமைச்சு மீது குறி வைத்துள்ளார் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ. 19

சட்டம் ஒழுங்கு அமைச்சையும், ஊடகத்துறை அமைச்சையும், ஐ.தே.கவுக்கு விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இறுக்கமான நிலைப்பாட்டில் இருப்பதால், புதிய அமைச்சரவை நியமனத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

புதிய அமைச்சர்களின் நியமனம் தொடர்பாக, ஜனாதிபதி முட்டுக்கட்டை பக்கம் 11

# கதையை மாற்றுகிறார் பஸில்!

கொழும்பு, டிசெ. 19

மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை இன்னமும் தமது கட்சியில் சேர்த்துக் கொள்ளவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்த நியமிக்கப்பட்டமையால் அவருக்கு இப்போது சிக்கல் நிலை எழுந்துள்ளது. வேறொரு கட்சியில் அங்கத்துவம் பெற்றவர் இன்னொரு கட்சி சார்பில் எவ்வாறு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கலாம் என்ற சர்ச்சை எழுந்துள்ளது.



இந்நிலையிலேயே பஸில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 9ஆம் திகதி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்து வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டதும், மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட சுதந்திரக் கட்சியின் 50இற்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து கொண்டனர்.

இவர்களுக்கான உறுப்புரிமை அட்டை வழங்கும் நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

இந்த நிலையில் நாடாளுமன்றக் கலைப்பு அரசமைப்புக்கு விரோதமானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால், மஹிந்த உள்ளிட்ட சுதந்திரக் கட்சியினரின் நிலை சிக்கலாகியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் யாப்புக்கு அமைய, மற்றொரு கட்சியில் உறுப்புரிமை பெற்றவரால், கட்சியில் நீடிக்க முடியாது, இதனால், மஹிந்த உள்ளிட்டவர்கள், நாடாளுமன்ற உறுப்புரிமையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை இன்னமும் தமது கட்சியில் சேர்த்துக் கொள்ளவில்லை என்று பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு நாங்கள் இன்னமும் பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமையை வழங்கவில்லை. அவர்கள் எம்முடன் இணைய முன்வந்தனர். விண்ணப்பங்களைக் கையளித்தனர். ஆனால், இன்னமும் அவர்களுக்கு உறுப்புரிமை வழங்கப்படவில்லை. என்றும் அவர் தெரிவித்தார்.

## 'தெல்லித் தென்றல்' இன்று வெளியீடு

தெல்லிப்பளை, டிசெ.19

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் 'தெல்லித் தென்றல்' சிறப்பு மலர் வெளியீடு இன்று பிற்பகல் 1 மணிக்கு தெல்லிப்பளை இராஜேஸ்வரி மண்டபத்தில் தெல்லிப்பளை உப அலுவலகப் பொறுப்பதிகாரி க.கனகநாதன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஓய்வு பெற்ற பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவும்,

சிறப்பு விருந்தினராக வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தனும் பங்குபற்றுவர்.

பிரதேச சபை செயலாளர் இராமலிங்கம் பகீரதன், வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியர் மகேந்திரன் சுரேந்திரன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வவிநாயகம் சிவயோகம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

## மஹிந்தவைச் சுற்றி ஓநாய்கள்!

கொழும்பு, டிசெ. 18

மஹிந்த ராஜபக்ஷவைச் சுற்றியுள்ள ஓநாய்களுடனும் நாய்களுடனும் பயணத்தைத் தொடரமுடியாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்ஸா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சியிலிருந்து ஆளும் கட்சிக்கு மாறிய விஜித் விஜயமுனி சொய்ஸா, தனது நிலைப்பாடு தொடர்பாக உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

பாரிய கூட்டணி அமைத்துக் கொண்டு உறுதியான நாடொன்றை ஏற்படுத்துவதே எமது நோக்கம். அதற்காகவே அரசுடன் இணைந்து கொண்டுள்ளேன். எமது கட்சித் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் கட்சிப் போசகர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் இணைந்து செயற்படுவதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது. ஆனால் மஹிந்த தற்போது வேறு கட்சி ஒன்றில் உறுப்புரிமை பெற்றுக் கொண்டுள்ளார் எனப் பத்திரிகைகளின் மூலம் அறிந்துகொண்டேன். என்றாலும் மஹிந்தவைச் சுற்றியுள்ள ஓநாய்களுடனும் நாய்களுடனும் இந்தப் பயணத்தை தொடரமுடியாது. சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் அநாதரவாக உள்ளனர். அவர்களைப் பாதுகாக்க வேண்டும் – என்றார்.(ஐ)

## இலங்கை இராணுவத்தினர் போர்க்குற்றம் புரியவில்லை

### படைப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 19

இராணுவத்தினர் எவரும் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என்பதே எமது நிலைப்பாடாகும் என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்ற பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றுகையில், போர்க் காலத்தில் இராணுவத்தினர் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு பக்கத்திலும் தவறுகள் இடம்பெற்றன, தற்போதும் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் பலர் வெளிநாடுகளில் சுதந்திரமாக வாழ்கின்றனர், அவ்வாறிருக்கையில் இராணுவத்தினர் மீது மாத்திரம் குற்றஞ்சுமத்துவது ஏற்கப்பட முடியாததாகும், சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமாயின் போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான இராணுவச் சிப்பாய்களும் அதிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துரும்பைத் தூக்கி அடித்திருக்கின்றார் சுமந்திரன்.

சு.கவும் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மூலம் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு எம்.பியானவர் மஹிந்தர். எனினும் சு.க. தலைமையுடன் முரண்பட்டு, மெல்ல பொதுஜன பெரமுன கட்சியைத் தொடங்கினார். எனினும் அவரோ, அவருடன் ஐ.ம.சு. கூட்டமைப்பு மூலம் எம்.பியான அவரது சகாக்களோ அக்கட்சியின் உறுப்புரிமையைப் பெறவில்லை. பின்னணியில் இருந்தே அக்கட்சியை இயக்கினர். எம்.பி. அல்லாத பஸில் ராஜபக்ஷவும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுமே அக்கட்சியின் நிர்வாகிகளாகச் செயற்பட்டனர்.

சு.க.உறுப்பினர்களான தாங்கள் இன்னொரு கட்சியில் சேர்ந்தால் சு.க.உறுப்புரிமையையும் அதன் மூலம் எம்.பி. பதவியையும் இழப்பர் என்பதை உணர்ந்தே அவர்கள் அப்படி செயற்பட்டனர்.

ஆனால், கடந்த மாதம் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடும் வர்த்தமானிப் பிரகடனத்தை ஜனாதிபதி வெளியிட்டதும், இந்த நாடாளுமன்றத்தின் காலம் முடிந்து விட்டது என்ற தெம்போடு – இனிப் பொதுத் தேர்தல்தானே என்ற நம்பிக்கையோடு – மொட்டுக் கட்சியில் போய் மஹிந்தர், மகன் நாமல் உட்பட டசின் கணக்கான எம்.பிக்கள் சேர்ந்தனர். அக்கட்சியில் தாங்கள் உறுப்புரிமை பெறும் படங்களையும் பகிரங்கப்படுத்திப் பிரசித்தப்படுத்தினர்.

ஆனால், ஐயோ பாவம். நீதிமன்றம் நாடாளுமன்றக் கலைப்பு அறிவிப்பை அரசமைப்புக்கு முரண் என்று அறிவித்து அதே நாடாளுமன்றம் தொடர்ந்து செயற்பட வழியேற்படுத்திவிட்டது.

சு.க.யாப்புப்படியும், இலங்கை அரசமைப்புப்படியும் ஓர் அரசியல் கட்சியின் சார்பில் எம்.பியான ஒருவர் அந்தக் கட்சியிலிருந்து விலகினால், வெளியேறினால் அல்லது நீக்கப்பட்டால் அந்த எம்.பி. பதவியையும் இழப்பர். அத்தகைய நடவடிக்கைக்கு எதிராக அவர் ஆட்சேபிக்க அல்லது நீதிமன்றுக்குச் செல்ல ஒரு மாத கால அவகாசம் உண்டு.

மேலும் சு.க.யாப்பு தமது கட்சி உறுப்பினர் ஒருவர் இன்னொரு கட்சியில் சேர்ந்தால், தமது கட்சி உறுப்புரிமையை அவர் இழப்பார் எனக் கூறுகின்றது.

அதன்படி, மஹிந்த அணியினர் சு.க.உறுப்புரிமையையும், அதன் மூலம் ஐ.மு.சு.கூட்டமைப்பு அங்கத்துவத்தையும், அதன் காரணமாக எம்.பி. பதவியையும் இழந்தவர்களாகிவிடுவர்.

புதுக்கட்சியில் தாம் இணைந்தமை பற்றிய அறிவிப்பை அவர்கள் வெளியிட்டு ஒரு மாதம் கடந்து விட்டது. அதனால் இவ்விடயத்தில் புதிய ஆட்சேபமோ மாற்று நடவடிக்கைகளோ எடுப்பதற்கான காலமும் கடந்துவிட்டது.

அந்த ஒரு மாத காலம் முடியும் வரைக் காத்திருந்து அதன் பின்னர் இந்தச் சட்ட வாதப் பீரங்கியை முழங்கியிருக்கின்றார் சுமந்திரன்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் அவர் நேற்று நாடாளுமன்றத்தில் கூறிய விடயத்தின் சாரம்சம் இதுதான் :–

*"எதிர்க்கட்சித் தலைவர் பதவி நிலை தொடர்பாக எமது கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைக்க விரும்புகிறேன்.*

*எதிர்கட்சித் தரப்பில் அதிக ஆசனத்தைக் கொண்டிருக்கும் கட்சிக்கே அப்பதவி உரியது என்பதில் எந்தக் கேள்விக்கும் இடமில்லை.*

*ஆனால் இவ்விடயத்தில் வேறு இரண்டு கேள்விகள் எழுகின்றன.*

*ஒன்று – ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி வரிசையில் உள்ளதா என்பது.*

*ஐ.ம.சு.கூட்டமைப்பின் தலைவரே இன்று அரசினதும் தலைவர். நிறைவேற்று அதிகாரத்தினதும் தலைவர். அமைச்சரவையினதும் தலைவர். அது மாத்திரமல்லர். அவர் அமைச்சரவையில் மூன்று அமைச்சுக்களையும் தம் கைவசம் வைத்திருக்கின்றார்.*

*அப்படி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவர் அரசினதும், அமைச்சரவையினதும் தலைவராக இருந்து கொண்டு, மூன்று அமைச்சுக்களையும் தம் வசம் வைத்திருக்கையில், அதே அவரது கட்சியைச் சேர்ந்த ஒருவர் எதிர்க்கட்சிகளின் தலைவராக இருக்க முடியாது என்பதுதான் எமது கட்சியின் நிலைப்பாடு (ஐ.ம.சு.கூட்டமைப்பின் தலைவர் அரசு பக்கமாக இருந்தால், அக் கட்சியும் அரசுப் பக்கமாகவே இருக்கலாமே தவிர எதிர்க்கட்சி அந்தஸ்தைக் கோர முடியாது).*

*அடுத்த விடயம் –*

*ஒரு கட்சியின் சார்பில் நாடாளுமன்றக்குத் தெரிவு செய்யப்படுபவர் அந்தக் கட்சியிலிருந்து வெளியேறினால் அல்லது நீங்கினால் அல்லது நீக்கப்பட்டால், அப்படி நீக்கிய நாளிலிருந்து ஒரு மாத காலத்தில் அவர் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழப்பவராவார் என்று எமது அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*சுதந்திரக் கட்சியிலிருந்து இன்னொரு கடசிக்கு கட்சி மாறியவர் அதனால் சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையும் அதன் மூலம் அது அங்கம் வகிக்கும் ஐ.ம.சு. கூட்டமைப்பு உறுப்புரிமையையும் இழப்பதுடன் அதன் காரணமாக அவற்றின் மூலம் கிடைத்த நாடாளுமன்ற உறுப்புரிமையையும் இழந்தவராகின்றார் என்ற யதார்த்தையும் நாம் கவனிக்க வேண்டும். இது புறக்கணிக்க முடியாத விடயம். ஏனெனில் இது நாடாளுமன்றத்தின் உறுப்புரிமை உள்ளடக்கத்தைத் தீர்மானிக்கும் அம்சம். இந்த அடிப்படையில் நாடாளுமன்றின் இந்த அவையில் இருப்பதற்கு தகுதியற்ற அந்நியர்கள் சிலர் இங்கு இருக்கின்றனர் என நான் நினைக்கிறேன். அத்தகையோர் சபையிலிருந்து அகற்றப்பட வேண்டும். ஆனால், இந்தக் கேள்வி நிச்சயமாக விரிவாக ஆராய்ந்து உண்மை கண்டறியப்பட வேண்டும்.*

*அத்தகைய உண்மையைக் கண்டறியும் தகைமை இந்த நாடாளுமன்றுக்கு முழு அளவில் உள்ளது. ஆகையினால் அதைக் கண்டறிவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமிக்கக் கோரும் திட்டத்தை நாம் முன் வைக்கிறோம்.*

*இன்று இந்த நாடாளுமன்றத்துக்குள் தாங்களும் உறுப்பினர்கள் என்று கூறிக் கொண்டு வந்திருக்கும் சிலர் உண்மையில் நாடாளுமன்ற உறுப்பினருக்கு உரிய உரிமையைக் கொண்டுள்ளனரா அல்லது அதை இழந்து விட்டனரா, அவர்கள் உண்மையில் இந்த சபைக்கு அந்நியரா என்று கண்டறிந்து முடிவு கட்ட வேண்டிய கட்டாயம் வந்துள்ளது.*

*அத்தகைய முடிவை இந்த சபை எடுக்கும் வரை எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் எந்த மாற்றத்தையும் செய்ய வேண்டாம் என நான் சபாநாயகரைக் கோருகின்றேன்.*

*இது கொள்கை அடிப்படையிலான ஒரு முக்கிய விடயம்.*

*நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராகவும் நாம் நீதிமன்றம் சென்றோம். அதுவும் கொள்கை அடிப்படையிலான விடயம் என்பதால்.*

*அந்த விவகாரத்தில் அரசமைப்பை இந்த ஜனாதிபதியே மீறினார் என்பதை உயர்நீதிமன்றத்தின் ஏழு நீதியரசர்களும் ஒரு மனதாக நிரூபித்து வெளிப்படுத்தினார்கள்.*

*அது போன்று நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்தவர்கள் இன்று சபைக்குள் இருந்தால் அவர்கள் உடனடியாக சபையிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். அதற்காக இவ்விடயம் பற்றி ஆராய்வதற்கு ஒரு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அவசியமாகின்றது."*

– இப்படிக் கூறினார் சுமந்திரன்.

இவ்விவகாரத்தில் மேலும் சில உள்விடயங்கள் உள்ளன.

டி.பி.விஜேதுங்க ஜனாதிபதியாக இருந்த போது மாற்றுக் கட்சியைச் சேர்ந்த சந்திரிகா பிரதமராக இருந்தார்.

அதேபோல சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது ரணில் பிரதமராக இருந்தார்.

இரண்டு அரசுகளிலும் ஜனாதிபதிகள் அமைச்சரவைக் கூட்டத்துக்குப் போனார்கள். அதற்குப் பதவி வழியாகத் தலைமை தாங்கினார்கள். ஆனால் அமைச்சுப் பதவி எதையும் தாங்கள் வைத்திருக்கவில்லை.

ஆனால் மைத்திரிபால சிறிசேன தாமும் சில அமைச்சுப் பதவிகளை தம்முடன் வைத்திருக்கின்றார். அதனால் ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சரவையில், அமைச்சராகவும் அவர் அங்கம் வகிப்பார்; வகிக்கின்றார். அப்படி ஐ.ம.சு.கூட்டமைப்பின் தலைவரான ஜனாதிபதி அரசில் அங்கம் வகிக்கும் போது, அவரது கட்சியில் இன்னொரு பிரமுகர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பது எங்ஙனம்? – இது நியாயமான கேள்விதான்.

கட்சி மாறிவிட்ட – அதைப் பகிரங்கமாக அறிவித்துவிட்ட – மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அணியினரும் அதனால் நாடாளுமன்றப் பதவியை இழந்துவிட்டனர் என்று கருதப்பட வேண்டும் எனும் விடயம் மிகவும் சட்ட வலிதான விவகாரம்.

சுமந்திரன் இறக்கியுள்ள சட்ட ஆப்பு மிக ஆழமாக உட்சென்றுள்ளது என்பதுதான் உண்மை.

- மின்னல் -

# வடக்கில் மின்சாரசபையின் வெற்றிடங்களுக்கு பெரும்பான்மையினரை நியமனம் செய்வதா?

## தமிழ் மக்கள் கூட்டணியின் பேச்சாளர் அருந்தவபாலன் சீற்றம்



யாழ்ப்பாணம்,டிசெ.19

வடக்கு மின்சாரசபை வெற்றிடங்களுக்கு பெரும்பான்மை இனத்தவர்கள் நியமிக்கப்பட்டமையை தமிழ் மக்கள் கூட்டணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

– இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் க.அருந்தவபாலன் தெரிவித்துள்ளார். முன்னாள் வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் புதிதாக ஆரம்பித்திருக்கும் தமிழ் மக்கள் முன்னணியின் சார்பில் கருத்து வெளியிட்டுள்ள அருந்தவபாலன் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு :-

அண்மையில் வடக்கு மின்சார சபைக்கு 46 சிங்கள இளைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுவும் தமிழ் மக்கள் மீதான ஒரு வகையான ஆக்கிரமிப்பாகவே கருதப்பட வேண்டும். தமிழ்ப் பிரதேசத்தில் எத்தனையோ ஆயிரம் இளைஞர்கள் வேலையின்றி துன்பப்படும்போது அவர்களுக்கு நியமனம் வழங்காது சிங்கள மாவட்டம் ஒன்றிலிருந்து வடக்குக்கு ஆள்கள் நியமிக்கப்பட்டமையை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது. ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

இதனை உடனடியாக இரத்துச் செய்து அவ்விடங்களுக்கு வடக்கிலுள்ள தகுதியான தமிழ் இளைஞர்கள் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும்.

அத்துடன் ஏற்கனவே மின்சார சபையில் பணியாற்றிய வறிய குடும்பத்தின் தகுதியானவர்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ் விடயங்களை உரிய தரப்புக்களின் கவனத்துக்கு எமது கட்சி கொண்டு செல்லும் என்பதுடன் இதற்கு எதிராகக் ஒருமித்து குரல் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். – என்றார் அவர். (உ)

# கிளிநொச்சியில் அதிக பனிமூட்டம்

கிளிநொச்சி,டிசெ.19

கடந்த சில நாள்களாக கிளிநொச்சியில் கால நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தின் கால நிலை தற்போது அதிக பனி மூட்டத்துடன் காணப்படுகிறது.

காலை ஏழு மணியை கடந்தும் பிரதேசங்கள் பனிமூட்டம் நிறைந்ததாக காணப்படுகின்றன.

காலையில் கடுமையான பனிப்பொழிவு காணப்படுகிறது. இதனால் எதிரே உள்ள காட்சிகளை அடையாளம் காண முடியாத இக்கட்டு நிலையும் ஏற்பட்டுள்ளது. காலையில் விடிந்த பின்னரும் வீதியில் செல்லும் வாகனங்கள் ஒளியைப் பாய்ச்சியபடி செல்வதையும் அவதானிக்க முடிந்தது.

அத்தோடு காலையில் நடமாடும் மக்களும் இக்குளிர் மற்றும் பனிமூட்டத்தினால் பெரிதும் சிரமப்பட்டனர். இதேவேளை, அதி காலையில் கடுமையான குளிர் நிலையும் தொடர்கிறது.

# தேசிய வளங்களை விற்றது மஹிந்த ராஜபக்ஷ அரசே

## ரவி கருணாநாயக்க சாட்டை



நாட்டின் தேசிய வளங்களை விற்பனை செய்தவர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரே என்பதற்கு காலி முகத்திடலில் அமைந்துள்ள சங்கிரிலா ஹோட்டலே சாட்சியாகுமென நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியினரின் நீதிக்கான போராட்டம் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) காலி முகத்திடலில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு மேலும் கூறியுள்ளவை வருமாறு –

தேசிய அரசாங்கம் நாட்டின் வளங்களை விற்று அந்நியர்களிடம் அடிமையாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாக பொய்யான குற்றச்சாட்டை மஹிந்த தரப்பினர் பரப்பி வருகின்றனர்.

ஆனால் மஹிந்தவின் ஆட்சி காலத்தில் தான் அரச காணிகளை குடும்ப தேவைக்காக விற்றார்கள் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

அதாவது இராணுவ தலைமையகத்துக்கு சொந்தமான காணிகளை கூட குடும்ப நலனுக்காக தாரைவார்த்தவர் மஹிந்த ராஜபக்ஷவே ஆவார். நாம் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை.

மேலும் மஹிந்தவினால் ஐ.தே.க.வுக்கு நிகராக இனி ஒருபோதும் ஆட்சியமைக்க முடியாது. மக்களை ஏமாற்றுவதற்காகவே அவர் பிரதமராக பதவியேற்றபின்னர் பொருள்களின் விலை மற்றும் பெற்றோலின் விலையை குறைத்தார். ஆனால் அதனை முறையாக நடைமுறைப் படுத்தவில்லை.

அந்தவகையில் நாம் பல போராட்டங்களுக்கு மத்தியில் மீண்டும் ஆட்சியை கைப்பற்றியுள்ளோம். ஆகவே இவ்வாட்சியை சிறந்த முறையில் நடத்துவதற்கு அனைவரும் உதவ வேண்டும். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். – எனரவிகருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

# பேசாலையில் 30 லட்சம் ரூபா செலவில் பொது நூலகம்






வடக்கு மாகாண சபையின் கிராமிய அபிவிருத்தி குறித்து ஒதுக்கப்பட்ட நிதித் திட்டத்தின் கீழ் பேசாலையின் மூன்று கிராம அலுவலக பிரிவுகளுக்கான – முப்பது லட்சம் ரூபா நிதிப்பங்களிப்பில் நிர்மாணிக்கப்பட்ட பேசாலை பொது நூலகம் நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள் புடைசூழ பேசாலை உதவி பங்குதந்தை அருட்பணி பசில் கிளைன் அடிகளார், மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம். முஜிஹீர் மற்றும் அதன் செயலாளர் திருமதி டீ.எம்.பி.லோகு ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. பொது நூலகக் கட்டடம் திறந்து வைக்கப்படுவதையும் அந்நிகழ்வில் கலந்து கொண்டோரின் ஒரு பகுதினரையும் படங்களில் காணலாம்.

(உ – 112)

# மட்டக்களப்பில் குழந்தைகளுடன் உண்ணாவிரதமிருந்த தாய் பொலிஸ் தரப்பு ஆலோசனையை அடுத்து அதை நிறுத்தினார்

மட்டக்களப்பு,டிசெ.19

தனது கணவனை விடுதலை செய்யக் கோரிய நான்கு பிள்ளைகளின் தாய் மட்டக்களப்பில் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முன்தினமிரவு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

கடந்த 30ஆம் திகதி வவுணதீவில் இரண்டு பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள அஜந்தன் எனப்படும் சி.இராஜகுமாரனின் மனைவியும் அவரது பிள்ளைகளுமே உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இவர்கள் நேற்று முன்தினம் காலை முதல் மட்டக்களப்பு, காந்தி பூங்காவில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந் நிலையில் நேற்று இரவு மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி டி.ஹகவத்துற போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்ணிடம் பேச்சு நடத்தினார்.

இதன்போது அவர் கைக்குழந்தை உட்பட ஐந்து வயதுக்கும் குறைந்த வயதுடைய குழதைகளை வீதியில் நிறுத்திப் போராடுவது குழந்தைகளின் உரிமையினை மீறும் செயல். அத்துடன் குழந்தைகளுக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்படுமானால் அதற்கான பொறுப்பினை தாய் ஏற்றுக்கொள்ள வேண்டும். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவர்கள் எந்தக் குற்றமும் செய்திருக்காவிட்டால் விடுதலை செய்யப்படுவார்கள். ஆகையால் எமது சட்ட நடவடிக்கைகளுக்கு உதவுங்கள் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதனைத் தொடர்ந்தே அந்தத் தாய் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை நிறைவு செய்கிறார் எனவும், நிரபராதியான தனது கணவனை விடுதலை செய்ய விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், இல்லாவிடின் வேறு முடிவுகளை எடுக்கவேண்டிய நிலைக்குத் தாம் தள்ளப்படுவார் எனவும் தெரிவித்தார்.



இதன்போது மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன், மாநகர சபை உறுப்பினர் செல்வி மனோகர், சர்வமத ஒன்றியத்தின் பிரதிநிதிகள் ஆகியோரும் அவ்விடத்திற்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சுமந்திரன் கிளப்பியுள்ள சர்ச்சை

ஐம்பது நாள்கள் பிரதமராக இருந்து நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் காட்ட முடியாது, நீதிமன்ற உத்தரவினால் பதவியை விட்டு வெளியேற வேண்டி நேர்ந்த மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படுவதாக சபாநாயகர் நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றத்தில் அறிவித்தாராயினும், அந்த நியமனமும் சர்ச்சைக்குரியதாகியிருக்கின்றது. அந்த சர்ச்சை குறித்துத் தமது முடிவை – தீர்ப்பை – சபாநாயகர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதுவரை மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியாவது இப்போதைக்குத் கிட்டுமா என்பது இழுபறியாகத்தான் இருக்கப் போகின்றது.

'பாவி போன இடம் பள்ளமும் திட்டியும்' என்பார்கள். அது போல மஹிந்த ராஜபக்ஷவுக்கு 2015 முதல் இறங்குமுகம் தான் போலும். போன இடம்மெல்லாம் அடுத்தடுத்து நெருக்கடி. ஏதேனும் ஒன்றில் இருந்து நிமிரலாம், மேலெழாம் என்றால் தொடர்ந்து நெருக்கடிதான்.

பிரதமர் பதவியை இழந்த பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையாவது வகிக்கலாம் என்றால் அதற்கும் ஆப்பு வைக்கப் பார்க்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினது சிபார்சின் பேரிலும் –

புதிய ஐ.தே.முன்னணி அரசில் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு இடம்பெறாத காரணத்தாலும் –

ஐ.ம.சு.கூட்டமைப்பின் பிரதிநிதியான மஹிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக் கொள்வதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய அறிவித்தபோது அதனை ஆட்சேபித்தார் சுமந்திரன். அவர் இரண்டு விடயங்களை முன்வைத்தார்.

முதலாவது – தற்போதைய அரசின் தலைவராக ஜனாதிபதியாக இருக்கின்றார். அவர் அமைச்சரவைக்கும் தலைமை தாங்குகின்றார். அது மட்டுமன்றி, மூன்று அமைச்சுக்களைத் தன் வசம் வைத்திருப்பதால் அமைச்சரவையிலும், அதன் மூலம் அரசிலும் அவர் பங்குதாராகின்றார். அவரே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினதும், சுதந்திரக் கட்சியினதும் தலைவரும் கூட. ஆக அரசிலும் அமைச்சரவையிலும் ஒரு கட்சியின் தலைவர் அங்கம் வகிப்பதோடு, அந்த அரசுக்கும் தலைமை தாங்குகையில், அவரது கட்சியைச் சேர்ந்த இன்னொருவர் எப்படி எதிர்க்கட்சித் தலைவராக இருக்க முடியும்? ஜனாதிபதி, தம் வசம் அமைச்சுப் பதவிகளையும் தக்க வைத்துக் கொள்வதன் மூலம் அரசில் பங்குதாரராகின்றார். ஆகவே அவரது கட்சி அரசுத் தரப்பில் இருப்பதாகவே கருதப்பட வேண்டும். எனவே, ஜனாதிபதி தலைமை வகிக்கும் சு. கவோ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்போ எதிர்க்கட்சி அந்தஸ்தையும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் கோர முடியாது.

2002 முதல் 2004 வரை ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சரவைக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தாரே தவிர, அமைச்சுக்கள் எதனையும் வைத்திருக்கவில்லை. அதனால் அவரது கட்சி எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றது.

அடுத்தது – சு.க. மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் எம்.பியான மஹிந்த ராஜபக்ஷ உட்படச் சிலர் தாங்கள் பொதுஜன பெரமுன கட்சியில் இணைந்து விட்டனர் எனப் பகிரங்கமாக அறிவித்துள்ளனர். சு.க. மற்றும் ஐ.ம.சு.கூட்டமைப்பின் யாப்புக்களின்படி அக்கட்சிகளில் எம்.பியானோர் பிற கட்சியில் சேர்ந்தால் தமது முதல் கட்சியிலிருந்து வெளியேறியவர்களாவர். அப்படி அக்கட்சியை விட்டு வெளியேறினால் தற்போதைய எம்.பி. பதவிகளை இழந்து விடுவர். அந்த வகையில் மஹிந்த ரஜபக்ஷ உட்பட ஒரு தொகுதியினர் இப்போது உண்மையில் எம்.பி. பதவியை இழந்துவிட்டனர். அவர்கள் இந்த நாடாளுமன்றுக்கு அந்நியர்கள். அத்தகையோருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை எங்ஙனம் வழங்க முடியும்?

சுமந்திரனினால் எழுப்பப்பட்ட இந்த சர்ச்சைகள் வலிதான வாதங்களாகவே தோன்றுகின்றன. இவ்விடயங்கள் குறித்து நாளை மறுதினத்துக்குள் ஆராய்ந்து தாம் ஒரு முடிவைக் கூறுவார் என சபாநாயகர் அறிவித்திருக்கின்றார்.

சுமார் நாற்பது மாதங்கள் தாம் அலங்கரித்த எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமக்குத் தொடர்ந்து கிட்டுமா அல்லது மஹிந்த கைக்குப் பறிபோகுமா என்ற முடிவை அறிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் வெள்ளிக்கிழமை வரை பொறுத்திருக்கத்தான் வேண்டும்.

எனினும் அவர் அந்தப் பதவியைத் தக்க வைக்கக் கூடியதான வாய்ப்பை ஏற்படுத்தும் விதத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் முன்வைத்திருக்கும் சட்ட வாதம் இலங்கை அரசியலில் பெரும் பிரளயத்தை ஏற்படுத்தி

# யாழில் பயணிகளுக்கான ஓட்டோ சேவை தொழில்சார் தகுதியில் அமைய வேண்டும்

## மீற்றர் பொருத்தும் நிகழ்வில் மேயர் வலியுறுத்து



யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை யாழ் முனீஸ்வரன் வீதியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனோல்ட்டும் கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வில் உரையாற்றிய முதல்வர் தனது உரையில்–

ஓட்டோ சாரதிகள் ஒரு தொழில்சார் ரீதியான உத்தியோகஸ்தர்கள் என்ற மனநிலை மக்களுக்கு ஏற்படுகின்ற வகையில் அவர்களுடைய மனப்பாங்குகள், நடவடிக்கைகளை மாற்ற வேண்டும். அதிலே முதலாவது கட்டம்தான் இந்த மீற்றர் பொருத்தி அங்குரார்ப்பணம் செய்கின்ற நிகழ்வு. தொடர்ந்து இந் நிகழ்வு பரிணாமங்களைப் பெற இருக்கின்றது. ஓட்டுநர்கள் தங்களுடைய ஓட்டோக்களை நல்ல தரத்தில் வைத்திருக்க வேண்டும்.

எமது மாநகர எல்லைகளுக்குள்ளே ஓடக்கூடிய ஓட்டோக்களுக்கு விசேடமாக மாநகரத்தினுடைய சின்னம் பொறிக்கப்பட்ட ஓர் அடையாளம் வழங்கப்படும்.

அடுத்த காலாண்டுப் பகுதிக்குள்ளே சாரதிகள் தங்களுடைய சீருடை எவ்வாறு இருக்க வேண்டும் என்று அவர்களே தீர்மானித்து அதனைச் சீர்செய்து கொள்ள முடியும்.

அவ்வாறு தொழில் சார் ரீதியாக எங்களுடைய தொழிலை நாங்கள் மதித்து செயற்படுவோமானால், வெளிப்படைத்தன்மையை நாங்கள் காட்டுவோமானால், யாழ் மாநகரத்தில் உள்ள பயணிகள், யாழ்ப்பாணம் மாநகரத்தின் எல்லைக்குள் சேவை வழங்குகின்ற ஓட் டோக்கள் மீது உச்ச பட்சமான நம்பிக்கையைக் கொள்வார்கள்.

ஓட்டோக்களில் சாரதியினுடைய பெயர், தொலைபேசி இலக்கம் மற்றும் முகவரி குறிப்பிட்டிருப்பது நல்லது. அளவுக்கு அதிகமாக இருக்கின்ற கண்ணாடிகள் குறைக்கப்பட்டு அதிக ஒளி எழுப்பக்கூடியஸ்பீக்கர்களைத்தவிர்த்து மிகவும் ஒழுக்க கட்டுப்பாட்டுடன் இச்சேவை வழங்குநர்களாக திகழ வேண்டும்.

தமக்கென உரித்தான தரிப்பிடத்திலே, சிறப்பான முறையில், மிக ஒழுக்கத்தோடு, ஓட்டோ தரித்து நிற்கக்கூடிய இடத்திற்குச் சென்றால் தனக்கு பாதுகாப்பு நம்பிக்கை இருக்கும் என்ற உள்ளுணர்வு மக்களுக்கு ஏற்படக் கூடிய வகையில் செயற்பட வேண்டும் – என்று குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், முன்னாள் வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா, முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெயசேகரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் பார்வைக்கு!

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட வரைவு மக்கள் பார்வைக்காக எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையில் வைக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

நிலைத்தகு அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு பிரதேச உட்கட்டமைப்பு அபிவிருத்தி, சிறார் நலன்கள், பெண்களின் முன்னேற்றம், வறுமை ஒழிப்பு, விசேட தேவையுள்ளவர்களுக்கான திட்டங்கள், பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், சுகாதார மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கலை, கலாசார விளையாட்டுத்துறை மேம்பாடு எனப்பல திட்டங்களையும் உள்ளடக்கியதாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் வரவு – செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு – செலவுத்திட்டம் பற்றி மேலும் கருத்துரைத்த தவிசாளர் –

இந்த வரவு – செலவுத் திட்டத் தயாரிப்பிற்கு ஏற்கனவே நாம் கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினர்களின் கருத்துக்கள், ஆலோசனைகளைச் சபையிலும் குழுக்களிலும் உள்வாங்கியே தயாரித்துள்ளோம். புதிதாக சபை அமைந்ததன் பின்னர் எமது நடவடிக்கைகளை திறன்பட ஆற்றிச்செல்வதற்காக துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளை உள்வாங்கியே திட்டங்களை வகுத்து வருகின்றோம்.

இதில் ஒரு நடவடிக்கையாக அமையப்பெற்ற சபையின் முதலாவது – வரவு செலவுத்திட்டம் என்ற வகையில், புத்திஜீவிகள், கிராமிய பொருளாதார மேம்பாட்டுச் செயற்பாட்டாளர்கள், பிரஜைகள் என சகல தரப்பினரின் ஆலோசனைகளையும் உள்வாங்கி பலதரப்பட்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டு மக்களுக்குப் பயனளிக்கத்தக்க வகையில் வரைவைப் பூர்த்தி செய்துள்ளோம். – என தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிரதேச சபைகள் தமது வரவு செலவுத் திட்டத்தை பொதுமக்கள் கவனத்திற்காகப் பொது இடங்களில் காட்சிப்படுத்த வேண்டும். இதனடிப்படையிலேயே வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் புத்தூர், அச்சுவேலி, கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய் ஆகிய உப அலுவலகங்களின் பொதுநூலகங்களிலும் வரவு– செலவுத்திட்டம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் உணவு நிலையங்களில் பணியாளருக்கு நோய்ப் பரிசோதனை

வவுனியா,டிசெ.19

வவுனியாவில் உணவு கையாளும் நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் 6 பேருக்கு நோய்த்தொற்றை ஏற்படுத்தக் கூடிய நோய் காவி காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் க.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 11 சுகாதார பரிசோதகர் பிரிவுகளிலும் காணப்பட்ட உணவகங்களில் கடமையாற்றும் உணவு கையாளும் உழியர்கள் 382 பேருக்கு இவ்வருடம் ஜனவரி தொடக்கம் நவம்பர் வரை மருத்துவ பரிசோதனை மேற்கொ ளப்பட்டு உணவங் களில் கடமையாற்ற அனுமதி வழங்கப்பட்டது.

அத்துடன், இம் மருத்துவ பரிசோதனையில் 3 பேருக்கு நெருப்பு காய்ச்சலை பரப்பக் கூடிய நோய்க்காவி காணப்பட்மைகண்டுபிடிக்கப்பட்துடன், 3 பேருக்கு காச நோயை ஏற்படுத்தும் நோய் காவி இருந்தமையும் கண்டு பிடிக்கப் பட்டது.

அவர்களுக்குரிய மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு, மீண்டும் அதே உணவகங்களில் கடமையாற்ற அனுமதி வழங்கப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## நாளை

20.12.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம்: கார்த்திகை பி.இ 2.17 வரை
திதி : திரயோதசி பி.இ 3.26 வரை
சுபநேரம் : 7.54 – 9.24 வரை
இராகுகாலம் : 1.54 – 3.24 வரை

# கூட்டமைப்பின் பொறுப்பற்ற செயற்பாட்டால் சர்வதேச விசாரணையை இழக்கும் நிலைமை

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரமுகர் விசனம்

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடு காரணமாக இலங்கையின் போர்க்குற்ற விசாரணைக்கு சர்வதேச நீதிமன்றம் தேவையற்றதாக மாற்றியுள்ளது எனத் தமிழ்த் தேசியக் மக்கள் முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சியில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளரும், கரைச்சி பிரதேச சபை உறுப்பினருமான தங்கவேல் ஜெகதீஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசிற்கு ஆதரவு வழங்குவது என்பது பெரிய நாடகம். அண்மையில் இடம்பெற்ற அரசியல் விடயங்களை நாம் நாடகமாகவே பார்க்கின்றோம். சர்வதேச ரீதியில் இலங்கைக்கு என்றுமில்லாதவாறு பெரும் அழுத்தம் காணப்பட்டது. யுத்த குற்றம், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் இலங்கைக்குப் பெரும் அழுத்தம் இருந்தது. இவற்றிலிருந்து மீள்வதற்காகவே இந்த அரசியல் நாடகம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் தற்போது சிறந்த சூழல் நிலவுகின்றது என்பதை சர்வதேசத்திற்குக் காண்பிப்பதற்காக நீதித்துறை சுயாதீனமாகவும், நம்பகத்தன்மை கொண்டதாகவும் செயற்படுவதாகக் காண்பிக்கப்பட்டுள்ளமையை நாம் பார்க்கின்றோம்.

இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் அளவிற்கு நீதித்துறை சீராகவும், நேர்மையாகவும் செயற்படுகின்றது, எனவே இலங்கையில் தற்போது சுமுகமான சூழல் நிலவுகின்றது என்று சர்வதேசத்திற்கு ஒரு படம் காண்பிக்கப்பட்டுள்ளது. இத்தகைய தோற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒத்துச் செயற்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளை சர்வதேசத்தின் பார்வையை – அழுத்தத்தை – குறைப்பதற்கான முயற்சியின் ஓர் அங்கமாகவே நாம் பார்க்கின்றோம். இந்த நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தனிழ் மக்களின் நலன் சார்ந்து செயற்படவில்லை. – என அவர் கருத்துத் தெரிவித்தார்.

இவ்வாறு எவ்வித நிபந்தனையும் இல்லாது தமிழ் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவைத் தொடர்ந்து வழங்கி வருகின்றது. இந்த நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு சிங்கள குடியேற்றம், பௌத்தமயமாக்கல் போன்றவற்றைத் தடுத்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், அரசியல் கைதிகள் விடுதலை போன்ற விடயங்களில் அதிகாரத் தரப்பின் உறுதிமொழியை எழுத்து மூலமாக பெற்றுக்கொண்டிருக்க வேண்டும் – எனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

# பெரியநீலாவணை விபத்தில் பிரபல முறிவு வைத்தியர் பலி

## இரட்டைச் சகோதரர்களான சிறுவர்கள் காயம்

பெரியநீலாவணை,டிசெ.19

அம்பாறை – பெரியநீலாவணை பிரதான வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் பிரபல முறிவு வைத்தியர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இச்சம்பவத்தில் அவருடன் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் கல்முனை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் பெரியநீலாவணையில் எலும்பு முறிவு வைத்தியராக சேவையாற்றும் கோட்டைக்கல்லாற்றைச் சேர்ந்த 68 வயதான செல்லத்தம்பி நமசிவாயம் என்பவரே உயிரிழந்துள்ளார். அவருடன் பயணித்த இரட்டைச் சகோதர்களான 7 வயதுடைய வி.தேமீஜன், வி.வேணுஜன் ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் பெரிய நீலாவணையில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பி ஓடிய கனரகவாகனச் சாரதியைப் பொதுமக்கள் விரட்டிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அங்கிருந்த இளைஞர்கள் விபத்தை ஏற்படுத்திய கனரக வாகனத்தை முற்றுகையிட்டு சோதனை செய்தபோது வாகனத்தில் இருந்த சிறிதளவு கஞ்சாவை மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# தொலைபேசி விற்பனை மையத்தில் களவாடப்பட்ட பொருள்கள் மீட்பு!

## கிளிநொச்சிப் பொலிஸார் நடவடிக்கை



கடந்த ஆறாம் திகதி கிளிநொச்சி நகரிலுள்ள தொலைபேசி விற்பனைநிலையம் ஒன்றில் களவாடப்பட்ட பெரும் தொகைப் பொருள்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

களவுச் சம்பவத்தின் போது சி.சி.ரி.வி. கமரா வில் பதிவான காட்சிகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு கிளிநொச்சி பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது களவாடப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டுள்ளமையோடு, இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் நிலத்திற்குக் கீழ் புதைக்கப்பட்டிருந்த நிலையில் 43 கைத்தொலைபேசிகள், 10 சார்ஜர்கள், கடையின் கதவை உடைப்பதற்குப் பயன்டுத்தப்பட்ட அலவாங்கு என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளனர் எனக் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அரவிந்தகுமாருக்கு இராஜாங்க அமைச்சு!

## பதுளை மக்கள் கோரிக்கை

கொழும்பு,டிசெ. 19

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசில் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அ. அரவிந்தகுமாருக்கு பிரதி அமைச்சு அல்லது இராஜாங்க அமைச்சு வழங்கப்படல் வேண்டுமென்று பதுளை மாவட்ட தமிழ் சமூக மற்றும் சமய அமைப்புகளுடன் தமிழ் மக்கள் இணைந்து வேண்டுகோள் விடுக்கின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் முக்கியஸ்தர்களான மனோகணேசன், பழனி திகாம்பரம், வேலுசாமி இராதாகிருஷ்ணன் மற்றும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ ஆகியோருக்கும் தமிழ் அமைப்புக்கள் அனுப்பியுள்ள நீண்ட மகஜர்களில் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

தொடர்ந்து அக்கடிதங்களில், பதுளை மாவட்டத்தில் கணிசமான தமிழ் மக்கள் வாழ்ந்து வரும் நிலையில் அம்மக்களின் பெரும்பான்மைபலமும் பெரும் ஆதரவும் நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமாரிற்கே இருந்து வருகின்றது. கடந்த பொதுத் தேர்தலிலும் தமிழ் மக்களின் ஆகக் கூடிய வாக்குகளைப் பெற்றவரும் அவரேயாவார்.

அதைத் தொடர்ந்து அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரொருவரினாலும் மேற்கொள்ள முடியாத பாரிய சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும், சமூக சேம நலன் குறித்த செயல்பாடுகளையும், கல்விசார் மேம்பாடுகளையும், சிறப்புடனும் வெற்றியுடனும் நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் முன்னெடுத்து வருகின்றார். இது யாவரும் அறிந்த உண்மையாகும்.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நிலையிலும் அவர் பாரிய வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வரும்போது அமைச்சர் என்ற அந்தஸ்து கிடைக்கப்பெற்றால் அவரது சேவைகள் பன்மடங்குகளாக அதிகரிக்குமென்பது திண்ணம்.

இலங்கை அரசியலில் கடந்த கால நெருக்கடியிருந்த போதிலும், கட்சி தாவாமல், கொள்கை மாறாமல், தனித்துவம் பேணப்பட்ட வகையில் தமிழ் முற்போக்குக் கூட்டணி யுடன் மிகவும் உறுதியாக இருந்து வந்தவர்களில் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் முக்கியமானவர்.

குறிப்பாக இலங்கை அரசியலில் நெருக்கடி ஏற்பட்டுள்ள வேளையிலும், மாற்றுத்தரப்பினர் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு, கோடிக்கணக்கான ரூபா விலை பேசப்பட்ட போதிலும், சிறிதும் விலை போகாமல், கொள்கையில் உறுதியாக இருந்து வந்தவர் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமாராவார். இவ்விடயம் அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். இத்தகைய இக்கட்டான நிலையிலும் எமது நாடாளுமன்ற உறுப்பினர் துணை போகவில்லை. எத்தகைய காட்டிக் கொடுக்கும் செயல்பாடுகளையும் அவர் மேற்கொள்ளவில்லை.

ஆகவே பதுளை மாவட்ட தமிழ் மக்களை கௌரவிக்கும் வகையிலும் அம்மக்களுக்கான உரிய சேவைகளை பணிகளை சிறப்புடன் மேற்கொள்ளும் வகையிலும் நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமாருக்கு பிரதி அமைச்சு அல்லது இராஜாங்க அமைச்சு வழங்கப்படல் வேண்டியது காலத்தின் அவசியத் தேவையாகும்.

இது விடயத்தில் எமது கோரிக்கை செவிமடுக்காத பட்சத்தில் பாரிய ஆர்ப்பாட்டப் போராட்டங்களையும் கண்டனப் பேரணிகளையும் பதுளை மாவட்டத்தில் பரவலாக மேற்கொள்ளவும் நாம் ஆயத்தமாகவுள்ளோம்.

பதுளை மாவட்ட தமிழ் மக்கள் மாத்திரமன்றி அனைத்து சிறுபான்மை மக்களினதும் பெரும்பான்மை சிங்கள மக்களினதும் பேரபிமானங்களையும் பெற்ற ஒரு பெருந் தலைவரை அச் சமூகத்தினரால் மதிக்கப்படுவதையும் இங்கு நினைவு கூற வேண்டியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# உயிரிழப்புகள், பேரழிவுகளை ஏற்படுத்தியபடி ஆந்திராவை தாண்டியது 'பெய்ட்டி' சூறாவளி

ஆந்திரா மாநிலம் காக்கிநாடா – ஏனாம் இடையே நேற்று முன்தினம் மதியம் 3.50 மணிக்கு 'பெய்ட்டி' புயல் கரையை கடந்தது.

'கஜா' புயலைத் தொடர்ந்து வங்கக் கடலில் உருவான சூறாவளிப் புயலுக்கு 'பெய்ட்டி' என பெயரிடப்பட்டது. இந்தப் புயல் மெல்ல நகர்ந்து, திங்களன்று மதியம் 12.45 மணிக்கு கிழக்கு கோதாவரி மாவட்டம் கண்ட்ரினி கோனா பகுதியில் கரையை அடைந்தது.

அப்போது மணிக்கு 80 முதல் 100 கி.மீ. வேகத்தில் காற்று வீசியது. பின்னர் காக்கிநாடா – ஏனாம் இடையே நேற்று மதியம் 3.50 மணிக்கு கரையைக் கடந்து, ஒடிசாவை நோக்கிச் சென்றது.

ஆந்திராவில் புயல் கரையை கடந்தபோது பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதில் ஆயிரக் கணக்கான மரங்கள் வேருடன் சாய்ந்தன. ஏராளமான மின் கம்பங்களும் சரிந்து விழுந்தன.



புயல் காரணமாக காக்கிநாடாவில் ஒரு கார் மீது மின் கம்பம் முறிந்து விழுந்தது. மின்சாரம் நிறுத்தப்பட்டிருந்ததால் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது.

விசாகப்பட்டினம், ஸ்ரீகாகுளம், கிழக்கு, மேற்கு கோதாவரி மாவட்டங்களில் சுவர் இடிந்து விழுந்தது மற்றும் மரங்கள் சாய்ந்த சம்பவங்களில் இதுவரை 7 பேர் பலியாகினர் எனத் தெரியவந்துள்ளது. காக்கிநாடாவிலிருந்து விசாகப்பட்டினம் கடற்பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்ற 6 மீனவர்களைக் காணவில்லை. அவர்கள் காற்றின் திசையில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கடல் சீற்றமும் அதிகமாகவே காணப்பட்டது. விசாகப்பட்டினம், கிழக்கு, மேற்கு கோதாவரி மாவட்டங்களில் கடல் சுமார் 5 முதல் 10 மீற்றர் வரை முன்னேறியது.

புயல் சின்னம் காரணமாக ஆந்திராவின் கடலோர மாவட்டங்களில் கடந்த இரு நாள்களாக கனமழை பெய்தது. இதனால் விசாகப்பட்டினம், விஜயநகரம், குண்டூர், கிருஷ்ணா, கிழக்கு, மேற்கு கோதாவரி மாவட்டங்களில் விவசாயப் பயிர்கள் நாசம் அடைந்தன. இதில் கிருஷ்ணா மாவட்டத்தில் மட்டும் 12 ஆயிரம் ஹெக்டேர் பயிர்கள் நாசமடைந்தன எனக் கூறப்படுகிறது.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் பேரிடர் மீட்புக் குழுவினர் விரைந்துள்ளனர். மின்வாரிய ஊழியர்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

புயல் முன்எச்சரிக்கை நடவடிக்கையாக, ஆந்திராவின் 7 கடலோர மாவட்டங்களில் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

இவர்களுக்கு உணவு, குடிதண்ணீர் மற்றும் மருத்துவ வசதிகளை ஆந்திர அரசு செய்து கொடுத்தது. ஒவ்வொரு கடலோர மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்களில் தகவல் மையம் அமைக்கப்பட்டிருந்து.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல்வேறு ரயில் சேவைகளை தென்மத்திய ரயில்வே நேற்று முன்தினம் ரத்துச்செய்தது. விசாகப்பட்டினம் விமான நிலையத்திற்கு வந்த விமானங்கள் ஹைதராபாத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டன.

திங்களன்று காலை முதல் மாலை 5 மணி வரை விசாகப்பட்டினம் விமானநிலையத்தில் எந்த விமானமும் தரையிறங்க அனுமதிக்கப்படவில்லை. கடலோர 7 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இரண்டு நாள்கள் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

# மும்பை ஆஸ்பத்திரியில் தீ! 8 பேர் பலி; பலர் படுகாயம்

மும்பை அரசு மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளது.

மும்பையில் பரபரப்பான அந்தேரி மரோல் பகுதியில் மத்திய அரசுக்கு சொந்தமான 'காம்கார்' என்ற தொழிலாளர் நல மருத்துவமனை உள்ளது. 5 மாடி கட்டடத்தில் இயங்கி வரும் இந்த மருத்துவமனையில் ஏராளமான நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு இருந்தனர்.

திங்களன்று மாலை 4 மணியளவில் மருத்துவமனையின் 4 ஆவது மாடியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. சிறிது நேரத்தில் தீ மளமளவென பரவியது. இதன் காரணமாக அதிகளவில் கரும்புகை வெளியேறி கொண்டிருந்தது. சிறிது நேரத்திலேயே மருத்துவமனை பகுதி முழுவதும் புகை மண்டலம் சூழ்ந்தது. தீ விபத்து ஏற்பட்டதை அறிந்ததும் டாக்டர்கள், நர்சுகள், மருத்துவமனை ஊழியர்கள் என அனைவரும் பதறியபடி ஓட்டம் பிடித்தனர்.

மருத்துவமனை மாடிகளில் உள்ள வார்டுகளில் அனுமதிக்கப்பட்டு இருந்த உள்நோயாளிகளும் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக அலறி அடித்துக்கொண்டு கீழே இறங்கினார்கள். நோய் தீவிரம் காரணமாக எழுந்திருக்கவும், நடக்கவும் முடியாத நிலையில், படுக்கைகளில் பல நோயாளிகள் கிடந்தனர்.

அவர்கள் தங்களை காப்பாற்றும்படி கூச்சல் போட்டனர். புகையின் காரணமாக நோயாளிகள் பலருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

இதனால் தப்பிக்க வழி தெரியாமல் அவர்கள் பரிதவித்தனர். உயிரை கையில் பிடித்துக்கொண்டு உதவி கேட்டு கதறினர். தகவல் அறிந்ததும் தீயணைப்பு படையினர் வாகனங்களில் விரைந்து வந்தனர். கரும்புகை கக்கியபடி தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. இதனால் தீயணைப்பு படையினருக்கு தீயை அணைக்கும் பணி சவாலாக இருந்தது. தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை கட்டுக்குள் கொண்டு வர போராடினார்கள். 12 வாகனங்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு இருந்தன.

தீயணைப்பு படையினர் ஆஸ்பத்திரிக்குள் இருந்து ஏராளமானோரை மீட்டனர். இவர்களில் பலர் தீக்காயம் அடைந்து இருந்தனர். மற்றவர்கள் புகையில் சிக்கி மூச்சு திணறி மயங்கிய நிலையில் இருந்தனர்.

விபத்து நடந்த பகுதியில் 6 நோயாளிகள் பலியானமை தெரியவந்தது. இதில் 2 வயது குழந்தையும் அடங்கும். இந்த நிலையில், சிகிச்சை பெற்று வந்த மேலும் இரண்டு பேர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர். இதனால், இந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளது.

# காங்கிரஸ் முதலமைச்சர்கள் 3 மாநிலங்களில் பதவியேற்பு



ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஷ்கார் மாநிலங்களில் நேற்று முன்தினம் காங்கிரஸ் முதலமைச்சர்கள் பதவி ஏற்றனர்.

மத்தியபிரதேச முதலமைச்சராக கமல்நாத் பதவி ஏற்றதும் விவசாய கடனை ரத்துசெய்து முதல் உத்தரவு பிறப்பித்தார்.

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஷ்கார், தெலுங்கானா, மிசோரம் ஆகிய 5 மாநில சட்டசபைகளுக்கு சமீபத்தில் தேர்தல் நடைபெற்றது.

இதில் தெலுங்கானாவில் தெலுங்கானா ராஷ்டிர சமிதியும், மிசோரம் மாநிலத்தில் மிசோ தேசிய முன்னணியும் அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைத்தன.

சத்தீஷ்கார், ராஜஸ்தான், மத்திய பிரதேசம் ஆகிய 3 மாநிலங்களில், பாரதீய ஜனதாவிடம் இருந்து காங்கிரஸ் ஆட்சியை கைப்பற்றியது. சத்தீஷ்காரில் காங்கிரஸ் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியை பிடித்தது. ராஜஸ்தானில் தனி பெரும்பான்மை கிடைக்காததால் கூட்டணி கட்சியான ராஷ்டிரிய லோக் தளம் உறுப்பினர் மற்றும் சுயேச்சை உறுப்பினர்கள் ஆதரவுடன் ஆட்சி அமைக்க முடிவு செய்தது. இதேபோல் மத்திய பிரதேசத்திலும் தனி பெரும்பான்மை கிடைக்காததால் சமாஜ்வாடி, பகுஜன் சமாஜ் மற்றும் சுயேச்சை உறுப்பினர்களின் ஆதரவுடன் ஆட்சி அமைக்க தீர்மானித்தது.

3 மாநிலங்களிலும் முதலமைச்சர் பதவிக்குக் கடும் போட்டி நிலவியது. நீண்ட ஆலோசனைக்கு பின் ராஜஸ்தான் முதலமைச்சராக அசோக் கெலாட்டும், துணை முதலமைச்சராக சச்சின் பைலட்டும் தேர்ந்து எடுக்கப்பட்டனர். மத்தியபிரதேச முதலமைச்சராக கமல்நாத்தும், சத்தீஷ்கார் முதலமைச்சராக பூபேஷ் பாகேலும் தேர்வு செய்யப்பட்டனர்.

3 மாநிலங்களிலும் நேற்று முன்தினம் காங்கிரஸ் முதலமைச்சர்கள் பதவி ஏற்றுக்கொண்டனர்.

# சீக்கியப் படுகொலைகளுடன் தொடர்புபட்ட கமல்நாத்தை முதலமைச்சராக நியமிப்பதா?

## காங். மீது சிரோன்மணி அகாலிதளம் சீற்றம்

டெல்லியில் 1984 ஆம் ஆண்டு சீக்கியர்களுக்கு எதிராக நடந்த இனப் படுகொலை வழக்கில் தொடர்புடைய கமல்நாத்தை மத்திய பிரதேச முதல்வராக பதவியில் அமர்த்தியுள்ளமை கண்டிக்கத்தக்கது, அவருக்கு விரைவில் நீதிமன்றம் தண்டனை வழங்கும் என மத்திய அமைச்சர் ஹர்சிம்ரத் கவுர் கூறியுள்ளார்.

1984 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி சுட்டுக்கொல்லப்பட்டார். அவர் சீக்கிய காவலர்களால் படுகொலை செய்யப்பட்டமையைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் சீக்கியர்களுக்கு எதிராக பெரும் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. ஆயிரக் கணக்கான சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

சீக்கியர்களுக்கு எதிராக நடந்த கலவரம் தொடர்பான வழக்கில் காங்கிரஸ் மூத்த தலைவர் சஜ்ஜன் குமார் உள்ளிட்டோருக்கு எதிராக புகார் எழுந்தது. டெல்லியில் சீக்கியர்கள் கொல்லப்பட்ட வழக்கில் காங்கிரஸ் மூத்த தலைவர் சஜ்ஜன் குமாருக்கு ஆயுள் தண்டனை விதித்து டெல்லி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதுகுறித்து மத்திய அமைச்சரும், சிரோன்மணி அகாலி தளக்கட்சியின் மூத்த தலைவருமான ஹர்சிம்ரத் கவுர் கூறியவை வருமாறு:-

"இந்திரா காந்தி மரணத்துக்கு பிறகு டெல்லியில் சீக்கியர்களுக்கு எதிரான நடந்த மிகக் கொடூரமான இனப்படுகொலை வழக்கில் முதன்முறையாக நீதி வென்றுள்ளது. காங்கிரஸ் மூத்த தலைவர் சஜ்ஜன் குமாருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சீக்கியர் படுகொலையில் தொடர்புடைய கமல்நாத்துக்கு மத்திய பிரதேச முதல்வர் பதவியை காங்கிரஸ் வழங்கியுள்ளது கண்டிக்கத்தக்கது. இந்த வழக்கில் சஜ்ஜன் குமாரை போலவே நாளை ஜெகதீஷ் டைட்லர் அதைத் தொடர்ந்து கமல்நாத்துக்கும் நீதிமன்றம் தண்டனை வழங்கும் என நம்புகிறோம்.

காங்கிரஸ்"க்கும் சீக்கியர்கள் படுகொலைக்கும் தொடர்பு இல்லை என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி சில மாதங்களுக்கு முன்பு மிகப்பெரிய பொய்யைக் கூறினார். சீக்கியர் படுகொலையில் ராஜீவ்காந்தி, சோனியா காந்தி என அனைவருக்கும் தொடர்பு உள்ளது. இதுகுறித்து விசாரணை நடத்த பிரதமர் மோடி உத்தரவிட வேண்டும்" எனக் கூறினார்.

### அமெரிக்காவின் அச்சுறுத்தல் போக்கினால்

# அணுஆயுத அழிப்பு நடவடிக்கை நிறுத்தப்படும் அபாயம் ஏற்படும்!




## வடகொரியா பதிலடி எச்சரிக்கை

வடகொரியாவின் மூன்று அமைச்சர்களுக்கு எதிராக அமெரிக்கா திடீரென அறிவித்த பொருளாதாரத் தடைகளால் சீற்றமுற்றுள்ள வடகொரியா, அணுஆயுத அழிப்பு நடவடிக்கை நிறுத்தபடும் சூழல் ஏற்படும் என மிரட்டியுள்ளது.

இதுகுறித்து வடகொரியா தரப்பில் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் -

“வடகொரியாவுடனான உறவில் நட்புறவை பேணுவதில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எடுக்கும் முயற்சிகள் பாராட்டக் கூடியவை. ஆனால் வட கொரிய அதிகாரிகள் மீது அமெரிக்கா தொடர்ந்து கடந்த சில ஆண்டுகளாகவே பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது. இதன் மூலம் அணு ஆயுதம் உற்பத்தி செய்வதை வடகொரியா கைவிடும் என்று அமெரிக்கா நினைத்தால் இது அமெரிக்காவின் தவறான கணிப்பாகும். மேலும் இது எங்களுடைய ஆணுஆயுதங்களை அழிப்பிற்கான பாதைக்கு நிரந்தர தடையை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல் தொடர்பாக வடகொரியாவின் மூன்று அமைச்சர்கள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டதாக அமெரிக்கா கூறியிருந்தது. பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட வடகொரிய அதிகாரிகளில் அந்நாட்டு அதிபர் கிம்முக்கு நெருக்கமானவரான சோ ராயிங் ஹேவும் ஒருவர்.

முன்னதாக கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி, வடகொரியா 22 ஏவுகணை சோதனைகளை நடத்தியது. இதில் இரண்டு சோதனைகள் ஜப்பான் கடலுக்கு அருகில் நடத்தப்பட்டன. வடகொரியாவின் இந்த நடவடிக்கையை அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் கடுமையாக எதிர்த்து வந்தன.

ஆனால், எதிர்ப்புகளைச் சற்றும் பொருட்படுத்தாமல் வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத ஏவுகணை சோதனைகளை நடத்தி வந்தது. இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா தலைமையில் வடகொரியாவின் மீது புதிய பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன.

எனினும் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளைப் பொருட்படுத்தாமல் வடகொரியா அவ்வப்போது ஏவுகணை சோதனைகளை நடத்தி வந்தது. இந்த நிலையில் தென்கொரியாவில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் வடகொரியா பங்கேற்றது. அதுமுதல் வடகொரியா – தென் கொரியா உறவில் இணக்கம் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து ட்ரம்ப் - கிம் இடையே சிங்கப்பூரில் சந்திப்பு ஏற்பட்டது.

இந்தச் சந்திப்பில் அணு ஆயுதங்களை அழிக்க வடகொரியா சம்மதம் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

# பிரபஞ்ச அழகியாக பிலிப்பீன்ஸ் யுவதி!



இந்த ஆண்டுக்கான பிரபஞ்ச அழகியாக(மிஸ் யுனிவர்ஸ்) பிலிப்பீன்ஸ் நாட்டைச் சேர்ந்த கேட்ரியோனா கிரே தேர்வு செய்து மகுடம் சூடியுள்ளார்.

இரண்டாம் இடத்தைத் தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த பெண்ணும், மூன்றாவது இடத்தை வெனிசுலா நாட்டைச் சேர்ந்த பெண்ணும் பெற்றனர்.

67 ஆவது பிரபஞ்ச அழகிப்போட்டி, தாய்லாந்தில் உள்ள நான்தாபுரி மாநிலத்தில் உள்ள முவாங்தாங் எனும் நகரில் நடந்தது. 94 நாடுகளைச் சேர்ந்த 92 பெண்கள் இந்தப் போட்டியில் பங்கேற்றனர். கடந்த 1992, 2005 ஆம் ஆண்டுக்குப் பின் தாய்லாந்து 13 ஆண்டுகளுக்குப்பின் மிஸ் யுனிவர்ஸ் அழகிப்போட்டியை நடத்தியது.

இதில் இந்தியாவில் இருந்து மும்பையைச் சேர்ந்த நேஹல் சுதாஸமா என்ற பெண்ணும் பங்கேற்றிருந்தார். அரையிறுதிச் சுற்றில் ஒவ்வொரு மண்டலத்தில் இருந்தும் – அதாவது அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா பசிபிக் ஆகியவற்றில் இருந்து - 20 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

ஆனால், இந்தியாவில் இருந்து சென்றிருந்த நேஹெல் சுதாஸமா அரையிறுதிச் சுற்றுக்கூட முன்னேறாமல் வெளியேறினார்.

அரையிறுதிச்சுற்றில் ஆஸ்திரியா, பெல்ஜியம், பிரேசில், கனடா, கோஸ்டாரிகா, குராகோ, இங்கிலாந்து, ஹங்கேரி, இந்தோனேசியா, அயர்லாந்து, ஜமைக்கா, நேபாளம், பிலிப்பீன்ஸ், போலந்து, பியூரிட்டோ ரிகோ, தென் ஆபிரிக்கா, தாய்லாந்து, அமெரிக்கா, வெனிசுலா, வியட்நாம் நாடுகளைச் சேர்ந்த பெண்கள் தகுதி பெற்றனர்.

இதில் முதல் 5 இடங்களில் வியட்நாம், பியூரிட்டோ ரிகோ, பிலிப்பைன்ஸ், வெனிசுலா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெண்கள் தகுதி பெற்றனர்.

இவர்களிடையே நடந்த கடும் போட்டியில் 2018 ஆம் ஆண்டுக்கான பிரபஞ்ச அழகியாக பிலிப்பீன்ஸ் நாட்டைச் சேர்ந்த கேட்ரியோனா கிரே தேர்வு செய்யப்பட்டு மகுடம் சூட்டப்பட்டார்.

# சோமாலியாவில் அமெ. தாக்குதலில் 62 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்

கிழக்கு ஆபிரிக்க நாடான சோமாலியாவில் அமெரிக்கா நடத்திய வான்வழித் தாக்குதலில் 62 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என அமெரிக்கத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இதுகுறித்து அமெரிக்க இராணுவத் தரப்பில் கூறப்பட்டவை வருமாறு:-

சோமாலியாவின் தென் பகுதியில் உள்ள பனாதிர் மாகாணத்தில் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை அமெரிக்கப் படைகள் வான்வழித் தாக்குதல் நடத்தின.

இதில் 62 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல் பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் பொதுமக்கள் யாரும் கொல்லப்படவில்லை. தொடர்ந்து அப்பகுதியில் தீவிரவாதிகளுக்கு எதிராகத் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளது.

சோமாலியாவில் இந்தத் தீவிரவாதிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதலாக இது கருதப்படுகிறது. சோமாலிய அரசுக்கு எதிராக அல் கொய்தாவுடன் இணைக்கப்பட்டுள்ள அல் பாப் தீவிரவாத இயக்கத்தினர் எதிராகத் தொடர்ந்து நாச வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.



பெரும்பாலும் ஹோட்டல்கள் மற்றும் சோதனைச் சாவடிகளைக் குறிவைத்து தீவிரவாதிகள் சமீபகாலமாக தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

## தன்பாலின ஈர்ப்பாளர் வாடகைத் தாயின் மூலம் பெற்ற மகனை தத்தெடுக்க சிங்கப்பூர் அனுமதி

தன்பாலின ஈர்ப்பாளர் (Gay) ஒருவர், வாடகைத் தாய் மூலம் பெற்றெடுத்த மகனைச் சிங்கப்பூரில் முறைப்படி தத்தெடுக்க அந்நாட்டு நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

நவீன காலத்துக்கு ஏற்ப சிங்கப்பூர் தன்னை புதுப்பித்துக் கொண்டாலும் தன்பாலின ஈர்ப்பாளர்களுக்கு அங்கு சட்டபூர்வ அனுமதி இல்லை. வாடகைத்தாய் மூலம் குழந்தை பெறுவதற்கும் சிங்கப்பூரில் இடமில்லை. இந்நிலையில் தன்பாலின ஈர்ப்பாளரான ஆண் ஒருவர், குழந்தை பெற விரும்பினார். இதனால் அமெரிக்காவில் வாடகைத் தாய் மூலம் குழந்தையைப் பெற முடிவு செய்தார். 2 லட்சம் டொலர்களுக்கு இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. இப்போது சிறுவனுக்கு ஐந்து வயது ஆகிறது.

பெயர் உள்ளிட்ட விவரங்கள் வெளியிடப்படாத 46 வயதான மருத்துவரான தன்பாலின ஈர்ப்பாளர் தன் மகனை சிங்கப்பூர் அழைத்து வந்தார். முறைப்படி தத்தெடுக்க அனுமதி கோரினார். ஆனால் மாவட்ட நீதிபதி அவரின் கோரிக்கையை நிராகரித்து விட்டார். இதனால் அவர் சிங்கப்பூர் உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்தார்

தத்தெடுப்பை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், சிறுவனின் நலனுக்காக இந்த அனுமதி வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளது. அத்துடன், ’இந்தத் தீர்ப்பு இந்த வழக்குக்கு மட்டுமே பொருந்தும்’ எனவும் ’இதுமாதிரியான செயல்களுக்கான பொதுவான அனுமதியாக இதனைக் கருதக்கூடாது’ என்றும் தலைமை நீதிபதி சுந்தரேஷ் மேனன் தெரிவித்துள்ளார்.

# ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியில் சிக்கியுள்ள அப்பாவி பெண்களைக் காப்பாற்றுங்கள்!

### நோபல் பரிசு பெற்ற யுவதி உருக்கமான வேண்டுகோள்

ஐ.எஸ்.பிடியில் சிக்கியுள்ள அப்பாவி பெண்களைக் காப்பாற்ற வேண்டும், அந்தத் தீவிரவாதிகளை நீதிக்கு முன்னால் கொண்டுவர வேண்டும் என்று அமைதிக்கான நோபல் பரிசு பெற்றநாடியா முராத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற நாடியா முராத் பேசும்போது -

ஐஎஸ் பிடியில் சிக்கி உள்ள யாசிதி பெண்களை மீட்பதற்கான முயற்சியில் யாருமே ஈடுபடவில்லை. ஈராக்கிலும் சரி, சர்வதேச அமைப்பிலும் சரி யாரும் அப்பெண்களைக் காப்பாற்ற வரவில்லை.

ஈராக்கில் பெண்கள் ஐ.எஸ். தீவிரவாதிகளால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகிறார்கள். ஐ.எஸ். தீவிரவாதிகள் பெண்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட பாலியல் பலாத்காரம் குறித்து வெளியில் பேசக் கூடாது என்று நினைக்கிறார்கள். ஆனால் நான் என் முடிவில் உறுதியாக



இருக்கிறேன். நான் பாலியல் பலாத்காரம் குறித்து உரக்கப் பேசுவேன். ஐ.எஸ். குற்றவாளிகளை நீதிக்கு முன்னால் கொண்டுவர வேண்டும்.

மேலும் அரபு நாடுகள் தீவிரவாதிகளுக்கு எதிராகத் தொடர்ந்து சண்டையிட வேண்டும். அப்போதுதான் யாசிதி போன்ற சிறுபான்மையின அமைப்புகள் பாதிக்கப்படாமல் இருப்பார்கள். யாசிதி பெண்கள் அவர்கள் இல்லத்துக்குத் திரும்ப உதவுங்கள். எங்களுடைய கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சகோதர சகோதரிகளுடன் அவர்களும் சேர்ந்து வாழ அனுமதியுங்கள் - என்றார்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் கடந்த ஒக்டோபர் மாதம் அமைதிக்கான நோபல் பரிசு கொங்கோவைச் சேர்ந்த மருத்துவரான டெனிஸ் முக்வேஜாவும், ஈராக்கைச் சேர்ந்த நாடியா முராத்துக்கும் நோபல் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

குர்து இன மனித உரிமை ஆர்வலரான நாடியா முராத் சிறுபான்மையினரின் சமூகமான யாசிதி இனத்தைச் சேர்ந்தவர். ஈராக்கில் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் பெரும் அச்சுறுத்தலாக வளர்ந்த ஐ.எஸ். தீவிரவாத அமைப்பால் தனது குடும்பத்தை இழந்து பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளானார். பின்னர் பல்வேறு போராட்டங்கள் நடத்தி ஐ.எஸ். அமைப்பிடமிருந்து தப்பி வந்து தற்போது ஐ.எஸ்.பிடியில் உள்ள பெண்களின் நலனுக்காகக் குரல் கொடுத்து கொண்டு இருக்கிறார்.

காலைக்கதிர் Kalaikkathir



# ஜி - 20 மாநாடு: அனைத்துலக அரசியல் நாடக மேடையே!




டிசெம்பர் மாத ஆரம்பத்தில் அனைத்துலக அரங்கில் தென் அமெரிக்க நாடான ஆஜென்ரீனாவில் இடம் பெற்ற உலகின் இருபது பெரிய நாடுகளின் G-20 மாநாடு மிக முக்கிய இடம் பெற்றிருந்தது.

ஜீ - 20 எனும் அனைத்துலக மன்றம், உலகின் மிகப் பிரதானமான தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளையும், பொருளாதார ரீதியாக தமது முதன்மை நிலையை எட்ட முயற்சிக்கும் பெரிய நாடுகளையும் ஒரு தளத்திற்கு அழைத்து பேச்சுகளுக்கு வழி வகைகள் செய்வதாகும்.

உலகின் 85 சதவீத, மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் உலகின் மூன்றில் இரண்டு பங்கு சனத்தொகையையும் தன்னகத்தே கொண்ட இந்த இருபது பெரிய நாடுகளும் உலக அளவிலும் பிராந்தியங்களின் அளவிலும் மிக முக்கிய பாத்திரம் வகிப்பனவாக பார்க்கப்படுகின்றன.

நாடுகளுக்கிடையே முக்கிய பொருளாதார வியாபார ஒப்பந்தங்களுக்கு காரணமாக இருக்கும் இந்த மாநாடு அதனோடு சமாந்தரமாக அல்லது இணைந்ததாக முறைசாரா அனைத்துலக அரசியல் நிகழ்வுகளை அரங்கேற்றுவதில் வல்லது.

புவனஸ் அயர்ஸ் நகரில் இடம் பெற்ற இந்த வருட மாநாட்டில் பல்வேறு நடை முறை அரசியல் விவகாரங்கள் முக்கிய இடம்பிடித்தன. சீன – அமெரிக்க வர்த்தகப் போர் குறித்த விடயங்களுக்கு ஒரு சமாதானத்தை ஏற்படுத்துதல், முடிக்குரிய சவுதி அரேபிய இளவரசரின் சம்மதத்துடன் துருக்கியில் இடம்பெற்ற பத்திரிகையாளர் படுகொலை குறித்த விவகாரம், கருங்கடலில் உக்ரேனுக்கு சொந்தமான இரண்டு பீரங்கிப் படகுகளையும் ஓர் இழுவைப் படகையும் ரஷ்யா கைப்பற்றியதன் பின் இடம்பெற்ற பதற்ற நிலை குறித்த விவகாரம் – ஆகிய நடை முறை விவகாரங்களுக்கு மத்தியில் அனைத்துலக அரசியல் நிலைமை நகர்ந்து சென்றது.

குறிப்பாக தலைவர்கள் மத்தியிலான தனிப்பட்ட இராஜதந்திர தொடர்பாடலின் நிபுணத்துவ காட்சிப்படுத்தலுக்கு ஓர் அரங்காக இந்த மாநாடு அமைந்ததாக மேலைத்தேய ஆய்வாளர்களின் பார்வை இருந்தது.

ஏனெனில் இம் மாநாட்டில் முன் ஒழுங்கு செய்யப்படாத தனிப்பட்ட உரையாடல்களும் முகத்துதிகளும் முக்கிய இடம்பெறுவது வழமை. அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ரஷ்ய சீன தலைவர்களை சந்திப்பது அவரது தனிப்பட்ட அனைத் துலக அரசியல் தலைமைத்துவ இராஜதந்திரத்தின் சோதனைக்கான நேரமாக பார்க்கப்பட்டது.

ட்ரம்ப் அவர்கள் தனது சுயஆளுமையின்பாலான விட்டு கொடுப்புகளையும் அதேவேளை அமெரிக்க மேலாதிக்கத்தையும் கையாளும் அதே வேளை, உலக தலைவர்கள் மீதான கொள்கை இலக்குகளை கொண்டு செல்லும் திறமையை பரிசோதிக்கும் களமாக அல்லது ஒரு சந்தர்ப்பமாக இந்த மாநாட்டை ஒட்டி நடைபெற்ற விவாதங்களில் பல ஆய்வாளர்களும் கூறினர்.

ஆனால் இந்த மாநாடு ஆரம்பித்ததும் சீன தலைவருடன் தனிப்பட்ட சந்திப்பை ஏற்றுகொண்ட ட்ரம்ப் ரஷ்ய தலைவருடனான சந்திப்பை பிற்போட்டு தவிர்த் துக் கொண்டார்.

கருங்கடலில் இடம் பெற்ற நிகழ்வை கருத்தில் கொண்டு அதனைக் கையாளுவதில் ட்ரம்ப் பல்வேறு ஆளுமைச் சிக்கல்களில் தள்ளப்படலாம் என்பதன் அடிப்படையில் இது தவிர்க்கப்பட்டதாக அமெரிக்க செய்தி நிறுவனம் சீ என் என் செய்தி வெளியிட்டது.

ஏற்கனவே கடந்த முறை ஹெல்சிங்கி நகரில் இவ் இரு தலைவர்களும் சந்தித்த வேளை, ரஷ்ய தலைவர் புட்டின், அதிபர் ட்ரம்புடன் ஒத்துப்போகாத நிலை உருவாகி இருந்தது. ரஷ்ய தலைவரின் ஆளுமை மேலாண்மை செலுத்திய நிலை இருந்தது.

ஜப்பானிய அமெரிக்க இந்திய தாராள பொருளாதார கூட்டாக இணைந்து JAI என்ற கூட்டையும், ரஷ்ய இந்திய சீன எதேச்சாதிகார, வர்த்தக கம்யூனிச நாடுகளுடன் இணைவது போலான RIC என்ற கூட்டுடனும் சுமுகமான ஒரு கூட்டை ஒத்துக் கொள்வது போலான நிலையையும் இந்தியா எடுத்திருந்தது. இந்திய பிரதமர் நரேந்திர மோடி எந்தக் கூட்டில் அதிகம் நாட்டம் கொண்டவர் என்பதை காட்டாத நிலை ஒன்றை கடைப் பிடித்தார். இது ஒரு அனைத் துலக அரசியல் நாடக மேடை என்ற பார்வையில் வைத்து பார்த்தால் மட்டுமே இந்தியாவின் போக்கை இந்த மாநாட்டில் சரிவர புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மீண்டும் தற்பொழுது கருங்கடல் விவகாரத்தில் சற்று அழுத்தமான பேச்சுகளே எதிர்பார்க்கப்படுவதால், இத்தகைய நிலையை தவிர்த்துக் கொள்ளும் வகையில் இந்த சந்திப்பு தவிர்க்கப்பட்டதாக வொஷிங்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

சீன அதிபருடனான சந்திப்பில் கடந்த ஒரு மாதங்களாக இடம் பெற்று வரும் வர்த்தகப்போர் நிலை அல்லது பழிக்குப் பழி வரிஅறவீடு என்பன ஒரு யுத்த நிறுத்த சூழலை அடைந்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது .

சீன அதிபர் ஷி ஜின்பின் கணிசமான அளவு அமெரிக்க தயாரிப்பு பொருள்களை கொள்வனவு செய்வதாக ஏற்றுக் கொண்ட தன் பேரில், வர்த்தக உபரி நிலையின் அளவு குறைக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் அதிபர் ட்ரம்ப் தற்காலிகமாக சீனப் பொருள்கள் மீதான வரி அறவீட்டை உயர்த்தும் நோக்கத்தை நிறுத்தி வைக்க சம்மதித்திருக்கிறார்.

அடுத்த தொண்ணூறு நாள்களில் சீனாவில் வர்த்தக கட்டமைப்பு ரீதியான மாற்றம் ஏற்படுத்துவது என ஏற்றுக் கொண்ட போதிலும் கடந்த பல தசாப்தங்களாக கட்டமைக்கப்பட்ட சீன முறைமைகள் அவ்வளவு விரைவாக தீர்க்கப்படும் என எதிர்பார்க்க முடியாது என்பது ஆய்வாளர்களின் நோக்காகும்.

மாநாடு நடந்து கொண்டிருந்த வேளையும், அதன் இடை நடுவிலேயும் அதிபர் ட்ரம்ப் தனித்து விடப்பட்டது போன்ற நிலை அனைத்துலக அரங்கில் ஐக்கிய அமெரிக்காவின் தலைமைத்துவத்தை கேள்விக்குள்ளாக்கி இருந்ததாக பல செய்தி நிறுவனங்கள் விமர்சித்திருந்தன.

பலராலும் பார்வைத் தொடர்பிலிருந்து தவிர்க்கப்பட்ட சவுதி அரேபிய இளவரசருடன் உயரகைகளால் அடித்துக்கொண்டு கைலாகு கொடுத்த ரஷ்ய தலைவர் புட்டினின் செயற்பாடு முக்கியமாக பலராலும் பேசப்பட்டது.

மேலும் சீன தலைவர் ஷி ஜின்பின் உலக அரசியல் தலைவர்களால் இடைவிடாத அளவில் பின்னும் முன்னும் மொய்த்த நிலை சீனாவின் பொருளாதார திடதன்மையின் வெளிப்பாடு என்பது பார்வையாகும்.

அதேவேளை இராஜதந்திர நகர்வுகளில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் நகர்வுகளை பல நாட்டு செய்தி ஊடகங்களும் கவனம் செலுத்தி இருந்தன.

மக்கட் தொகையாலும் பொருளாதாரத்தாலும், மூலோபாயத்தாலும் புவிசார் அரசியல் சார்பாகவும் இந்தியாவின் முக்கியத்துவம் வளர்ந்து வருகிறது. புதுடெல்லியின் ஒத்தாசை இல்லாமல் அல்லது புதுடெல்லியுடன் முரண்பட்ட நிலையில் எந்த அமெரிக்க கனவும் அல்லது சீனப் பார்வையும் கூட இலகுவில் பலிக்காது என்பது தற்போதைய அனைத்துலக நிலையாகும்.

ஜப்பானிய அமெரிக்க இந்திய தாராள பொருளாதார கூட்டாக இணைந்து JAI என்ற கூட்டையும், ரஷ்ய இந்திய சீன எதேச்சாதிகார, வர்த்தக கம்யூனிச நாடுகளுடன் இணைவது போலான RIC என்ற கூட்டுடனும் சுமுகமான ஒரு கூட்டை ஒத்துக்கொள்வது போலான நிலையையும் இந்தியா எடுத்திருந்தது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி எந்தக் கூட்டில் அதிகம் நாட்டம் கொண்டவர் என்பதை காட்டாத நிலை ஒன்றை கடைப்பிடித்தார். இது ஒரு அனைத்துலக அரசியல் நாடக மேடை என்ற பார்வையில் வைத்து பார்த்தால் மட்டுமே இந்தியாவின் போக்கை இந்த மாநாட்டில் சரிவர புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இந்திய பத்திரிகைகள் தமது இராஜதந்திரத்தின் முதலீடு என்றும் பெருமிதம் கொண்ட செய்திகளை வெளியிட்டிருந்தன. ரஷ்ய ஆய்வாளர்கள் இந்தியா கொப்புகளின் மத்தியிலே ஊசலாடும் போக்கைக் கொண்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர்.

வட அத்திலாந்திக்கரை ஆய்வாளர்கள் தாராள பொருளாதார கூட்டே இந்தியாவுக்குச் சிறந்தது என்ற பார்வையையும் ஜனநாயக நாடுகள் என்றும் ஒன்றாக இணைந்து செயல்படுவதே முறை என்ற கருத்தையும் கொண்டிருந்தனர்.

**லண்டனில் இருந்து**
**லோகன் பரமசாமி**

# விண்ணப்பம் கோரலை இரத்துச் செய்க! தவறின் பெரும் போராட்டம் வெடிக்கும்!!

## கிழக்கு முன்னாள் முதல்வர் நஸீர் போர்க்கொடி



மட்டக்களப்பு, டிசெ. 19

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கான இலங்கை ஆசிரியர் சேவை 31(அ) தரத்திற்கு மாவட்ட ரீதியாக பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கானதிறந்த போட்டிப்பரீட்சைக்கு தற்போது கோரப்பட்டிருக்கும் விண்ணப்பங்கள் உடன் நிறுத்தப்பட்டு அது மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் பட்டதாரிகள் பொது மக்கள் வீதியில் இறங்குவர். இதற்கான பாரிய பேராட்டம் வெடிக்கும்.

– இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் அதிரடி அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த நியமனங்கள் வழங்குவது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பில் கிழக்குமாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட பட்டதாரிகளுக்கு மேலதிகமாக பதுளை, பொலநறுவை, அனுராதபுரம், கண்டி, மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டத்தில் வாழும் பட்டதாரிகளுக்கும் சிங்களப் பாடசாலைகளுக்கான நியமனம் என்ற ரீதியில் உள்வாங்கப்படுவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது. இது குறித்து தெளிவுபட ஆராயவேண்டிய அவசியம் எற்பட்டுள்ளது.

நான் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேலையில்லாத பட்டதாரிகளை ஆசிரியசேவைக்குள் உள்வாங்குவதற்கான தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்து வந்தேன். கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட கிட்டத்தட்ட 5 ஆயிரத்து 400 இற்கும் அதிகமான பட்டதாரிகள் இந்த வேலைவாய்ப்பில் தமக்கான சந்தர்ப்பங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

அந்தவகையில் கடினமான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டதன் மூலமாக இந்த 5 ஆயிரத்து 400 பட்டதாரிகளுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்பட்டது. எனினும், அவரால் தடங்கல் ஏற்பட்ட நிலையில் நான் இதனை எனது தனிப்பட்ட முயற்சியின் மூலமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு முன்வைத்தேன்

பிரதமரின் ஆலோசனைக்கு அமைய அவரது பொருளாதார ஆலோசகர் பாஸ்கரலிங்கத்துடன் இதற்கானபேச்சுநடைபெற்று 5 ஆயிரத்து 400 பேருக்கும் நியமனம் வழங்குவது எனவும், முதற்கட்டமாக ஆயிரத்து 700 பேருக்கு வழங்க இடம் ஒதுக்கப்பட்டு இதற்கான நிதி ஒதுக்கீடும் திறைசேரியால் வழங்கப்பட்டது.

இந்நிலையில், மாகாண சபை ஊடாக நாம் இந்த நியமனங்களை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகளை நடத்தினோம். இதன்போதும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தோரை உள்வாங்க வேண்டும் என்ற பிரச்சினை எழுந்தது. எனினும், நாம் அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை.

இக்காலவேளையில் மாகாண சபை கலைக்கப்பட்டமை காரணமாக இந்த விடயம் காலதாமதத்துக்கு உள்ளானது. பின்னர் இந்த நியமனங்களில் ஆயிரத்து 300 நியமனங்களை 2017 நவம்பரில் ஆளுநர் வழங்கியிருந்தார்.

இந்நிலையில், தற்போது எம்மால் பெறப்பட்ட வெற்றிடமாகவுள்ள ஏனைய இடங்களுக்கான நியமனங்களை வழங்குவதற்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நமது மாகாணப் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பைப் பிரதான நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த வாய்ப்பை வேறு எந்த விதத்திலும் – நியாயமற்ற முறையிலும் கடந்த காலங்களைப் போன்று வழங்க எடுக்கப்படும் திரைமறைவு முயற்சிகளைநாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

கடந்த காலங்களில் ஆளுநர்களின் அதிகாரங்களின் ஊடாக மாகாணத்தைத் தவிர்ந்த பட்டதாரிகளுக்கு இவ்வாறான நியமனங்கள் வழங்கப்பட்டு வந்தன. இதனூடாக நியமனங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் சிறியகாலத்தின்பின்னர் இடமாற்றங்களைப் பெற்று மாவட்டங் களையும் மாகாணத்தையும் விட்டு தத்தமது மாவட்டங்களுக்குச் சென்றதன் காரணமாக வெற்றிடங்கள் வெற்றிடங்களாக மட்டும் உள்ளன.

எனது பதவிக்காலத்தில் இவை குறித்து நான் பல்வேறு ஆதாரங்களைப்பெற்றுக்கொண்டமை காரணமாக பல காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டேன். குறிப்பாக இவ்வாறான வெற்றிடங்கள் முதலில் மாகாணத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளித்துநிரப்பப்பட வேண்டும். பின்னர் உரியவர்கள் இல்லைஎன்றநிலையில்ஏற்படும் வெற்றிடங்களுக்கு மட்டுமே ஏனைய மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதே எனது பணிப்புரையாக இருந்தது.

கடந்த கால நடவடிக்கைகளைக் கருத்தில்கொண்டு இந்த விடயத்தில்தீர்க்கமாக ஆராய்ந்து நியாயமான நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

இது குறித்து மாகாண மட்டத்தில் இயங்கும் பல்வேறு பட்டதாரிகள் அமைப்புகள் எனது கவனத்துக்கு முன்வைத்திருக்கின்றன.

எனவே, முதலில் இந்த விண்ணப்பம்கோரலைஉடன் இரத்துச் செய்ய வேண்டும். தற்போது பதவி ஏற்றுள்ள பிரதமரது அமைச்சரவை நியமனங்கள் நடைபெற்ற பின்னர் நான் அவரை நேரில் சந்தித்து இவ் விடயம் குறித்து துரித நடவடிக்கை எடுப்பேன் – என்று குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

## அலோசியஸ் தொடர்ந்தும் விளக்கமறியலில்



கொழும்பு, டிசெ.19

பிணைமுறி ஊழல் விவகாரம் தொடர்பாகக் கைது செய் யப்பட்ட பேர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று இருவரும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இருவரையும் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு கண்காட்சியும் உடனடி வேலைவாய்ப்பு ஏற்பாடுகளும்

யாழ்ப்பாணம், டிசெ. 19

வடக்கு மாகாணத்தில் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையிலும் போலி முகவர்களின் மோசடிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலும், அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் சேவை நிறுவனம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நாளை வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது.

ஐந்து நட்சத்திர விருது வென்ற இலங்கையின் முதற்தர வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமான எமரால்ட் ஜல் நிறுவனத்தின் வடக்கு மாகாண கிளையே இவ்வாறு இந்த மாகாணத்தின் ஒரேயொரு அரச அங்கீகாரம் பெற்ற முகவர் நிறுவனமாக செயற்பட ஆரம்பிக்கிறது.

கல்வி – தொழில் வழிகாட்டி சேவையை வழங்கி வரும் சிகரம் நிறுவனம் 10 ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைப்பதையொட்டியே, அந்த நிறுவனத்தின் இணை நிறுவனமாக அரச அங்கீகாரத்துடன் இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம், இலக்கம் 221, 1/1, மின்சார நிலைய வீதி என்ற முகவரியில் நாளை வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப் படுகிறது.

அரச அங்கீகாரத்துடன் உத்தியோகபூர்வமாக இந்தச் சேவை முதன்முதலாக வடக்கு மாகாணத்தில் ஆரம்பித்து வைக்கப்படுவதை யொட்டி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் சேவை தொடர்பாகவும், கிடைப்பனவாகவிருக்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் தொடர்பாகவும் வடக்கு மாகாண மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள உதவும் வகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் தொடர்பான கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

டிசெம்பர் 20, 21 மற்றும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் ஜனவரி 4 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலும், 5 ஆம் திகதி துணுக்காய் பிரதேச செயலகத்திலும் இந்தக் கண்காட்சி நடத்தப்படவிருக்கிறது.

டுபாய், கட்டார், சவுதி அரேபியா, குவைத், பாரேன், ஓமான், மாலைதீவுகள் உள்ளிட்ட நாடுகளிலும், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, அயர்லாந்து உள்ளிட்ட சில ஐரோப்பிய நாடுகளிலும் பல்வேறுபட்ட துறைசார்ந்த சுமார் 2500க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள் இந்தக் கண்காட்சிகளின்போது எமரல்ட் ஜல் நிறுவனத்தின் மூலம் வழங்கப்படவிருக்கின்றன.

துறைசார்ந்த பயிற்சியும், தொழில் அனுபவமும் உள்ளவர்கள் இந்த வேலைவாய்ப்புகளுக்கு உடனடியாகவே விண்ணப்பம் செய்து நம்பிக்கையான முறையில் விசா அனுமதியைப் பெற்று வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சேவைகளுக்கு, இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக விதி முறைகளின்படி முற்கூட்டியே கட்டணங்கள் எதுவும் அறவிடப்படுவதில்லை என்றும் மேற்படி நிறுவனம் அறிவித்துள்ளது.

## பளை முகாவில் பாடசாலைக்கு நிழல் பிரதி இயந்திரம் கையளிப்பு

பளை, டிசெ.19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் பளை முகாவில் அ.த.க பாடசாலைக்கு நிழல்பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது.

கல்லூரி சமுகத்தின் நீண்டகால வேண்டுகோளிற்கு அமைவாக வட்டார பிரதேச சபை உறுப்பினர் அருட்செல்வியினது சிபாரிசுக்கு அமைய இந்த நிதி ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த இயந்திரத்தை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசெயலர் பரமோதயன் ஜெயராணி ஆகியோர் கல்லூரி அதிபரிடம் கையளித்திருந்தனர்.

இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் உப தவிசாளர் மு.கஜன், உறுப்பினர்களான வீரவாகுதேவர், ரமேஷ், கோகுல்ராஜ் ஆகியோர் மற்றும்பிரதேசசெயலகஉத்தியோகஸ்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(அ)



# பேர்த் டெஸ்டில் விழுந்து படுத்தது இந்தியா ஆஸியின் வெற்றித் தாகம் தணிந்தது

## 2ஆவது இன்னிங்ஸில் கோஹ்லி அணி 140 உடன் சுருண்டது



பேர்த்தில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியை 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து நீண்ட வெற்றித் தாகத்தை தணித்துக் கொண்டது ஆஸ்திரேலிய அணி.

நேற்று இந்த டெஸ்டின் இறுதி நாள் ஆட்டம் தொடங்கியது முதல் மொத்தம் 15 ஓவர்கள் மட்டுமே விளையாடிய இந்திய அணி மீதமிருந்த 5 விக்கெட்டுகளையும் 28 ஓட்டங்களுக்குள் போராடாமல் தாரை வார்த்துக் கொடுத்து தோல்வி அடைந்தது

இந்தத் தோல்வியின் மூலம் இந்த ஆண்டில் வெளிநாடுகளில் விராட் கோஹ்லி தலைமையில் இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் பெறும் 7 ஆவது தோல்வி இதுவாகும். இதற்கு முன் அதிகபட்சமாக ஓர் ஆண்டில் வெளிநாடுகளில் டெஸ்ட் போட்டி தோல்வி



என்பது 6 மட்டுமே. கடந்த 2014 ஆம் ஆண்டில் இருந்தது. அதை இப்போதுள்ள இந்திய அணி முறியடித்து சாதனை படைத்துவிட்டது.

அதேசமயம், இந்த ஆண்டு டேர்பன் நகரில் நடந்த தென் ஆபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் கடைசியாக ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றிருந்தது, அதன்பின் எந்த டெஸ்ட் போட்டியிலும் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெறவில்லை.

ஏறக்குறைய 8 டெஸ்ட் போட்டிகளாக வெற்றியே இல்லாமல் வறண்டு, துவண்டு, சோர்வடைந்து கிடந்த ஆஸ்திரேலிய அணிக்கு இந்த வெற்றி நீர்பாய்ச்சி புதிய தெம்பை அளித்திருக்கிறது. இந்த வெற்றி மூலம் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1:1 என்ற கணக்கில் சமன் செய்துள்ளது ஆஸ்திரேலிய அணி.

இரு இன்னிங்ஸிலும் சேர்த்து 8 விக்கெட்டுகள் வீழ்த்திய நாதன் லயன் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

அதேசமயம் இந்திய அணியும் கடந்த 2 டெஸ்ட் போட்டிகளில் பல்வேறு பாடங்களைக் கற்றுக்கொண்டது. தொடக்க வீரர்கள் சரியில்லாமல் ஆடியதால், கடந்த 2 டெஸ்ட் போட்டியிலும் நடுவரிசை வீரர்களுக்கே சுமை கூடியது. குறிப்பாக சட்டீஸ்வர் புஜாரா, ரஹானே, விராட் கோஹ்லி ஆகியோரே கடந்த 2 டெஸ்ட் போட்டிகளிலும் பெரும்பாலும் சுமையைச் சுமந்தனர்.

ஆதலால், அடுத்து வரும் 2 டெஸ்ட் போட்டிகளிலும் தொடக்கக் கூட்டணியை மாற்ற வேண்டிய கட்டாயத்துக்கு இந்திய அணி தள்ளப்பட்டுள்ளது. இந்த டெஸ்ட் தொடரில் இருந்து காயம் காரணமாக பிரித்வி ஷா நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக மயங்க் அகர்வால், ஹர்திக் பாண்டியா வருகின்றனர். ஆதலால், புதிய வீரர்களை அணிக்குக் கொண்டு வந்து வரும் 2 ஆம் திகதி தொடங்கும் 'பொக்ஸிங் டே' டெஸ்ட் போட்டியை வலிமையாக எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இந்திய அணி உள்ளது.

அணியில் விராட் கோஹ்லிக்கு அடுத்தாற்போல், நின்று நிலைத்துத் துடுப்பெடுத்தாடக்கூடிய வீரர்கள் இல்லாதமை தோல்விக்கு முக்கியக் காரணமாகும்.

ரிஷப் பந்த் இளம் வீரராகவும், பொறுமையாக களத்தில் நிற்க இயல்பில்லாதவராகவும் உள்ளார். ஆதலால், அடுத்த 2 டெஸ்ட் போட்டிகளில் பார்த்தீவ் பட்டேலை களமிறங்கி இந்திய அணி சோதிக்கலாம். ஆஸ்திரேலிய மண்ணில் கடந்த காலத்தில் அவரின் அனுபவம், துடுப்பாட்ட அனுபவம் ஆகியவை இந்திய அணிக்கு சிறப்பு சேர்க்கும்.

இந்த டெஸ்ட் போட்டியில் வேகப்பந்துவீச்சுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்த கப்டன் விராட் கோஹ்லி, சிறப்பு வாய்ந்த சுழற்பந்து வீச்சாளருக்கு வாய்ப்பு அளித்திருக்கலாம். உமேஷ் யாதவுக்குப் பதிலாக துடுப்பாட்டத்திலும், பந்துவீச்சிலும் சிறப்பாகச் செயல்படும் ரவிந்திர ஜடேஜாவை அணியில் சேர்த்திருந்தால், கடைசி வரிசைத் துடுப்பாட்டத்தை அவர் பலப்படுத்தி இருப்பார்.

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி பேர்த்தில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 326 ஓட்டங்களுக்கும், இந்திய அணி 283 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்தன. 2ஆவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி 243 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதையடுத்து, முதல் இன்னிங்ஸில் பெற்ற முன்னிலையையும் சேர்த்து இந்திய அணிக்கு 287 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால், ஆடுகளமும் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமாக மாறியதால், தொடக்கமே இந்திய அணிக்கு அதிர்ச்சியாக அமைந்தது. இந்த டெஸ்ட் போட்டியிலும் கே.எல்.ராகுலும், முரளி விஜய்யும் சொதப்பலாக துடுப்பாடினர்.

### மோசமான தொடக்கம்

ராகுல் டக்அவுட்டிலும், முரளி விஜய் 20 ஓட்டங்களிலும் வெளியேறினார்கள். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட புஜாரா 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். முதல் இன்னிங்ஸில் சதம் அடித்து சவால் விட்ட விராட் கோஹ்லி 17 ஓட்டங்களிலும், ரஹானே 30 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

4 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 112 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இந்திய அணி இழந்திருந்தது. களத்தில் விஹாரி 24 ரன்களுடனும், ரிஷப் பந்த் 9 ஓட்டங்களுடனும் நேற்றைய ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

### 15 ஓவர்களில் முடிந்தது

விஹாரி கூடுதலாக 4 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஸ்டார்க் பந்துவீச்சில் மிட்விக்கெட்டில் ஹாரிஸிடம் கேட்ச் கொடுத்து 28 ஓட்டங்களில் வெளியேறினார்.



அடுத்து உமேஷ் யாதவ் களமிறங்கி, ரிஷப் பந்துடன் சேர்ந்தார். இருவரும் சில ஓவர்கள் மட்டுமே தாக்குப் பிடித்தனர். களத்தில் பொறுமை காக்காமல் ரிஷப் பந்த் அவசரப்பட்டு விக்கெட்டைப் பறிகொடுத்தார். லயன் வீசிய 54 ஆவது ஓவரில் பவுண்டரி அடித்த நிலையில் அடுத்த பந்தை ரிஷப் பந்த் தூக்கி அடிக்க அது மிட்விக்கெட் திசையில் ஹேண்ட்ஸ்கம் கையில் கேட்சாக மாறியது. ரிஷப் பந்த் 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.



ஸ்டார்க் வீசிய 55ஆவது ஓவரில் அவரிடமே கேட்ச் கொடுத்து உமேஷ் 2 ஓட்டங்களில் பெவிலியன் திரும்பினார்.

55ஆவது ஓவரை வீசிய கம்மின்ஸ் தனது பங்கிற்கு டெய்லண்டர்கள் பும்ரா, இசாந்த் சர்மாவை டக்அவுட்டில் அனுப்பினார்.

56 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 140 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 146 ஓட்டங்களில் தோல்வி அடைந்தது. ஆஸ்திரேலியா தரப்பில் லயன், ஸ்டார்க் தலா 3 விக்கெட்டுகளையும், ஹேசல்வுட், கம்மின்ஸ் தலா 2 விக்கெட்டுகளையும் சாய்த்தனர்.

## எதிர்க்கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கிறார் என சபாநாயகர் நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்குக் கூடிய போதே, சபாநாயகர் கரு ஜயசூரிய இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதனால், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இரா.சம்பந்தன் பதவியிழந்துள்ளார்.

முன்னதாக ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் நடந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த முடிவைச் சபாநாயகருக்கு அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டமையை அடுத்து சபையில் கடும் எதிர்ப்புகள் கிளம்பின. சபை முதல்வரும் ஐக்கியதேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி., ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா ஆகியோர் இதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

மஹிந்த அண்மையில் ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் தனது சகாக்களுடன் இணைந்து கட்சி உறுப்புரிமையைப் பெற்றுள்ளார். இதனால் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இழக்கப்படுகின்றது. எனவே, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கும் ஒருவருக்கு – ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய ஒருவருக்கு – அக்கட்சியின் பெயரில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்குவதை ஏற்க முடியாது என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைத்து அதனூடாக எதிர்க்கட்சித் தலைவர் பதவி விவகாரத்துக்குத் தீர்வு காணுமாறும் சபாநாயகரிடம் அவர்கள் வலியுறுத்தினர்.

கூட்டமைப்பின் எம்.பி. சுமந்திரன் அரசமைப்பின் ஷரத்துக்களை எடுத்துக்காட்டி நீண்ட நேரம் கடும் எதிர்ப்பை வெளியிட்டார்.

இந்த விவகாரத்துக்கு தெரிவுக்குழு மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என மீண்டும் மீண்டும் அவர் வலியுறுத்தினார்.

இதையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் பதவி விவகாரம் தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை எழுத்து மூலம் தன்னிடம் தருமாறும், எதிர்வரும் வெள்ளிக் கிழமை அது தொடர்பான தீர்மானத்தைச் சபையில்தான் அறிவிப்பார் எனவும் சபாநாயகர் தெரிவித்தார். (ஐ)

## முல்லைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கடலில் அடித்துவரப்பட்டுக் கரை ஒதுங்கியது என்று தெரிவிக்கப்பட்டது.

புலிக்கொடி தொடர்பில் மீனவர்களால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய புலிக்கொடி மீட்கப்பட்டு பொலிஸாரால் எடுத்து செல்லப்பட்டுள்ளது. (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அபேசிங்க தெரிவித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்படும் 30 அமைச்சர்களின் பட்டியல் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் உள்ளிட்ட 15 தொடக்கம் 20 வரையான அமைச்சர்கள் இன்று பதவியேற்பார்கள்.

சட்டம் ஒழுங்கு அமைச்சர் தொடர்பாக இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

எஞ்சிய அமைச்சர்கள் அடுத்த சில நாள்களில் பதவியேற்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) போது தப்பி சென்றுள்ள நிலையில் 4 பேர் சிக்கிக்கொண்டனர். அவர்கள் நால்வரும் நையப்புடைக்கப்பட்ட பின்னர் பளைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு கோவில் முள்ளியானைச் சேர்ந்த சி.நமசியாவம் (வயது – 60) என்ற முதியவர் ஒருவரைக் கார் மற்றும் தளபாடங்கள் விற்பனை செய்யும் வாகனம் ஆகியவற்றில் வந்த 7 பேர் கொண்டு கும்பல் கடத்திச் சென்றுள்ளது.

இதனை அவதானித்த அந்தப் பகுதி இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் கடத்தல்காரர்களைச் சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் துரத்திச் சென்று இயக்கச்சிப் பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்தனர். அவர்களில் மூவர் தப்பிச் செல்ல நால்வர் மட்டும் சிக்கிக்கொண்டனர். அவர்கள் நால்வரும் இளைஞர்களால் நையப்புடைக்கப்பட்டனர்.

இதன்போது சம்பவ இடத்திற்கு வந்த பளைப் பொலிஸார், நால்வரையும் கைது செய்தனர். அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது கடத்தப்பட்ட முதியவர் தமக்கு பல லட்சம் ரூபா பணம் கொடுக்கவேண்டும் எனவும், அதனாலேயே தாம் கடத்தினர் எனவும் கடத்தல்காரர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை, கடத்தல்காரர்கள் தொடர்பில் விசாரணை நடத்தியபோது அதில் இருவர் இயக்கச்சி இராணுவ முகாமை சேர்ந்த இராணுவச் சிப்பாய்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

இந்தக் கடத்தல் சம்பவத்தில் கைதாகியுள்ள இராணுவச் சிப்பாய்கள் இருவரையும் கொழும்பில் இருந்து வந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் தன்னுடன் அழைத்துச் சென்று குறித்த முதியவரைக் கடத்தியுள்ளார். (ஐ-07)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மத்தியகுழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கூடியது.

இதன்போதே, கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தைத் தாண்டிபுதிய அரசுடன் இணைந்து கொள்ளும் அந்தக் கட்சியின் உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

அரசுடன் இணையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்காதிருக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## சட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) போடுவதால், சிக்கல் ஏற்பட்டுள்ளது.

சட்டம், ஒழுங்கு அமைச்சின் கீழ் இருந்த பொலிஸ் திணைக்களத்தை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த ஒக்ரோபர் மாதம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்திருந்தார்.

இந்த நிலையில் ஐ.தே.க. அரசிடம் சட்டம், ஒழுங்கு அமைச்சை விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்று அவர் விடாப்பிடியாக உள்ளார். அதேவேளை, ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டுக்கு ஐ.தே.க. எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களம் மீண்டும் சட்டம், ஒழுங்கு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள ஐ.தே.க., அந்த அமைச்சுப் பதவி தமது கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

அதுபோன்றே, ஊடகத்துறை அமைச்சும் தனது வசமே இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சை விட்டுக் கொடுத்தாலும் கூட, இரண்டு அரச ஊடக நிறுவனங்கள் தனது நேரடிக் கட்டுப்பாட்டிலேயே இருக்கவேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருக்கிறார்.

இதற்கும் ஐ.தே.க. எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அனைத்து ஊடக நிறுவனங்களும் ஊடகத் துறை அமைச்சின் கீழேயே இருக்கவேண்டும் என்றும், அந்த அமைச்சு ஐ.தே.கவிடம் ஒப்படைக்கப்படவேண்டும் ஐ.தே.க. தெரிவித்துள்ளது. இதனால் புதிய அமைச்சரவை நியமனத்தில் இழுபறிகள் ஏற்பட்டுள்ளன.

அதேவேளை, நிதி அமைச்சர் பதவி தொடர்பாக, ஐ.தே.கவின் முக்கிய தலைவர்களான மங்கள சமரவீரவுக்கும், ரவி கருணாநாயக்கவுக்கும் இடையில் இழுபறி ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மத்தியவங்கிபிணைமுறிவிவகாரத்தை அடுத்து, நிதி அமைச்சர் பதவியில் இருந்து விலகிய ரவி கருணாநாயக்க மீண்டும் அந்தப் பதவியைப் பிடிக்கப் போட்டி போடுகிறார்.

ஏற்கனவே நிதியமைச்சராகப் பதவி வகித்த மங்கள சமரவீரவும், அந்தப் பதவி தனக்கே வழங்கப்படவேண்டும் என்று கோரி வருகிறார். இதனால் ஐ.தே.கவில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. (ஐ)

## இறுதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவர் மேலும் கூறுகையில் – எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் இறுதித் தீர்மானம் இன்னமும் இல்லை. மஹிந்த ராஜபக்ஷவை எக்காரணம் கொண்டும் எதிர்க்கட்சித் தலைவராக ஏற்கவே முடியாது. நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாகவே எதிர்க்கட்சித் தலைவர் பதவி விவகாரத்துக்குத் தீர்வு காணப்பட வேண்டும். எமது எதிர்ப்புக்கள் தொடர்பான எழுத்துமூல ஆட்சேபனைகள் கிடைத்த பின்னர் இது தொடர்பான தனது தீர்மானத்தை எதிர்வரும் வெள்ளிக்கிழமை அறிவிப்பார் என சபாநாயகர் தெரிவித்துள்ளார். எனவே, இறுதித் தீர்மானம் வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனே எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் தொடர்வார். – என்றார். (ஐ)

## ஆளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஒரு மணிக்கு நாடாளுமன்றம் கூடிய சற்று நேரத்தில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களான விஜித் விஜித முனி சொய்சா, இந்திக பண்டார நாயக்க, லக்ஷ்மன் செனிவிரத்ன ஆகியோர் ஆளும்கட்சி வரிசையில் சென்று அமர்ந்து கொண்டனர்.

முன்னதாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 21 பேரும் எதிர்க்கட்சியில் அமர வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

எனினும், மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஆளும் கட்சிக்குத் தாவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்கள் மூவரும் ஆளும் கட்சிப் பக்கம் சென்றபோது ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேசைகளில் கைகளைத் தட்டி – அவர்களுக்குக் கைலாகு கொடுத்து – கட்டிப் பிடித்து வரவேற்றனர். இதன்போது எதிரணி வரிசையில் அமர்ந்திருந்த மஹிந்த அணி எம்.பிக்கள் கூச்சலிட்டனர். (ஐ)

## என்.எம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பதில் கொடுத்துவிட்டார் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ சபையில் கடுமையாகச் சாடினார்.

புத்தகங்களில் அறிந்து கொள்ள முடியாத விடயத்தை கடந்த ஐம்பது நாள்களில் அனுபவம் மூலமாக மக்கள் உணர்ந்து விட்டனர். நிறைவேற்று அதிகாரத்தை நீக்கும் இறுதிச் சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டுள்ளது. இதனை அனைவரும் இணைந்து நீக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கும் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை முன் வைத்து உரையாற்றினார். அதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நிறைவேற்று அதிகாரத்தை வைத்துக்கொண்டு கடந்த சில நாள்களாக நிறைவேற்று அதிகாரி எவ்வாறு செயற்பட்டார், மக்கள் ஆணையை எவ்வாறு எட்டி யுதைத்துத் தன்னிச்சையாக செயற்பட்டார் என அவதானிக்க முடிந்தது.

கடந்த சில நாள்களாக அவர் நடந்துகொண்ட விதம் எவ்வாறு என்பது அறிய முடிந்தது. கடந்த 50 நாள்களாக நாட்டின் ஜனநாயகத்திற்கும், மக்கள் ஆணைக்கு அமைய ஜனாதிபதி செயற்பட்டாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதனை அடுத்து இனியும் நிறைவேற்று அதிகாரம் அவசியமாக என்ற கேள்வியும் எழுந்துள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்டுவரப்பட்டபோது இந்த ஆசனத்தில் பைத்தியக்காரன் அமர்ந்தால் என்ன ஆகும் என என்.எம்.பெரேரா ஒருமுறை கேட்டாராம். ஆனால் அப்போது எம்மால் அதனை உணர முடியவில்லை. ஆனால் 40 ஆண்டுகளின் பின்னர் மைத்திரிபால சிறிசேன அதனை நிரூபித்து விட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே மஹிந்த ராஜபக்ஷவை தாக்கியுள்ளார். இப்போதாவது இவற்றை அனைவரும் விளங்கிக்கொள்ளுங்கள். 20ஆம் திருத்தத்தில் மாற்றுத் திருத்தங்கள் எதனையும் செய்யவேண்டும் என்றால் அதனைச் செய்வோம்.

வாக்கியங்களில் குறைகள் இருப்பின் அதனை நிவர்த்திசெய்வோம், ஆனால் நிறைவேற்று முறைமையினை தொடர்ந்தும் தக்கவைக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன் – என்றார். (ஐ)

## சம்பந்தனுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இரா.சம்பந்தனைப் பல தடவைகள் பார்த்து புன்முறுவலுடன் சிரித்த மஹிந்த ராஜபக்ஷ எம்.பி., கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனுக்குக் கைலாகு கொடுத்து அவருடன் சில விநாடிகள் சிரித்தவாறு உரையாடினார்.

பிரதமராக மீண்டும் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் நாடாளுமன்றம் நேற்று முதன்முதலாகக் கூடியது.

சபை அமர்வு பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் ஆரம்பமான பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் பதவி விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியது. அது தொடர்பில் விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது எதிரணி வரிசையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு அருகில் அமர்ந்திருந்த மஹிந்த ராஜபக்ஷ எம்.பி., சம்பந்தனைப் பல தடவைகள் பார்த்து புன்முறுவலுடன் சிரித்தார். அவ்வேளைகளில் சம்பந்தனும் சிரித்தவாறு இருந்தார்.

பிற்பகல் 2.15 மணியளவில் நேற்றைய நிகழ்ச்சி நிரலுக்கமைய, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் ஆரம்பமானது.

இதன்போது தனது சகாக்கள் சிலருடன் சபையை விட்டு மஹிந்த ராஜபக்ஷ எம்.பி. வெளியேறியபோது, சபையில் சம்பந்தனுக்குப் பின்னால் அமர்ந்திருந்த சுமந்திரன் எம்.பிக்குச் சிரித்தவாறு கைலாகு கொடுத்தார். அத்துடன் சில விநாடிகள் சுமந்திரனின் கரங்களைப் பற்றியவாறு மஹிந்த உரையாடினார்.

நேற்றைய சபை அமர்வில், மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டமைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து சுமந்திரன் எம்.பி. உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமைச்சுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மனோகணேசன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன், மலிக் சமரவிக்ரம ஆகியோர் தீர்மானித்துள்ளனர்.

டுவிட்டர் பதிவின் ஊடாக இத்தகவலை மனோ கணேசன் உறுதிப்படுத்தினார்.

தனியாட்சி அமையும் பட்சத்தின் அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுகளின் எண்ணிக்கை 30 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. இராஜாங்க மற்றும் பிரதியமைச்சுகளின் எண்ணிக்கை 40 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கட்சி தாவிய உறுப்பினர்களும் அமைச்சர் பதவிகளைக் கேட்பதால், புதிய அமைச்சர்கள் நியமனத்தில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இதன்போது, அமைச்சர் தொகையை 30இற்குள் வைத்துக்கொள்ளத் தான் தடுமாறுகிறார் எனவும், எவராவது சுயமாக முன்வந்து அமைச்சு பதவிகளை பெறாமல் இருக்க முடியுமா எனவும் பிரதமர் கேட்டுள்ளார்.

இதற்குப் பதிலளித்த மனோ கணேசன், அவசியமானால், நான் அமைச்சு பதவி ஏற்காதிருக்கிறேன் என்று கூறியுள்ளார். ரிஷாத் பதியுதீனும் இதே கருத்தை முன்வைத்துள்ளார். (ஐ)

# வாள்வெட்டுகளுடன் தொடர்புடைய 9 பேர் யாழ்ப்பாணத்தில் கைதாகினர்

## ஆறு வாள்கள், இரு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஹயஸ் மீட்பு





(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ்ப்பாணத்தில் அண்மைய நாள்களாக இடம்பெற்ற பல்வேறு வாள்வெட்டுச் சம்பவங்கள் மற்றும் கொள்ளைகளுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் ஒன்பது பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ஆறு வாள்கள் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள் மற்றும் ஹயஸ் வாகனமொன்றையும் தாங்கள் மீட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் வாள்வெட்டுக்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்ற நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில் விசேட பொலிஸ் குழுவொன்று அமைக்கப்பட்டிருந்தது.

இக் குழுவினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையிலேயே நேற்று முன்தினம் திங்கட்கிழமையும் நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலையிலும் மேற்படி ஒன்பது பேரையும் கைது செய்துள்ளமையுடன் அவர்களிடமிருந்து வாள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு விசேட பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டவர்களையும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட பொருள்களையும் சுன்னாகம் பொலிஸாரிடம் கையளித்துள்ளனர். இவர்களை நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வாள்வெட்டுச் சம்பவங்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பலரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் நிறுத்தியுள்ளனர் எனவும் இன்னும் பலரைக் கைது செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (உ- 7)

# காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகப் பிரதிநிதி மன்னார் மனிதப் புதைகுழியை நேரில் அவதானிப்பு





தலைமன்னார்,டிசெ.19

மன்னார் நகரில் ச.தொ.ச. கட்டுமானப் பணிமேற்கொள்ளப்பட்ட இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வுபணி 118 நாளான நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றபொழுது அதனை நேரடியாகப் பார்வையிட்டு தகவல்கள் பெறும் நோக்குடன் காணாமல் ஆக்கப்பட்டோரின் அலுவலக பிரதிநிதி மிராக் ரஹீம் அங்கு நேரில் வருகை தந்தார். அகழ்வுப் பணிக்குப் பொறுப்பான அதிகாரி சட்டவைத்திய நிபுணர் சமிந்த ராஜபக்ஷவிடம் விவரங்களைக் கேட்டறிந்தார். கடந்த மார்ச் மாதம் கண்டுபிடிக்கப்பட்ட இந்த மனிதப் புதைகுழியில் நேற்று செவ்வாய்க்கிழமையுடன் 118வது நாளாக அகழ்வு மேற்கொள்ளப்படுகிறது.

இதுவரைக்கும் இந்த மனிதப் புதைகுழியிலிருந்து 276க்கு மேற்பட்ட மனித எச்சங்கள் அடையாளமிடப்பட்டுள்ளன எனவும் இவற்றில் 269க்கு மேற்பட்ட எச்சங்கள் குழியிலிருந்து வெளியேற்றப்பட்டு மன்னார் மாவட்ட நீதிமன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது. மன்னார் மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜா மேற்பார்வையில் சட்டவைத்திய நிபுணர் சமிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்று வரும் மனித எச்சங்களை வெளியேற்றும் பணியுடன் குழியை ஆழப்படுத்தலும் அகலப்படுத்தல் பணிகளும் இடம்பெறுகின்றமையையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இப்பணியை நேரடியாக பார்வையிடுவதற்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் அலுவலக பிரதிநிதி மிராக் ரஹீம் மன்னாருக்கு விஜயத்தை மேற்கொண்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் ஆஜராகிவருகின்ற சட்டத்தரணிகளில் ஒருவரான செல்வி எஸ்.புராதினி சகிதம் புதைகுழிப் பகுதிக்குச் சென்று அகழ்வுப் பணிக்குப் பொறுப்பான அதிகாரி சட்டவைத்திய நிபுணர் சமிந்த ராஜபக்ஷவிடம் விவரங்களை கேட்றிந்தார். கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்களில் ஒரு பகுதியை மரபணுப் பரிசோதனைக்காக வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பி வைப்பதற்கான முன்னேற்பாடும் இடம்பெற்று வருவதாகத் தெரியவருகிறது.



# உறங்கிக் கொண்டிருந்த யானைகளை தட்டி எழுப்பி விட்டுவிட்டார் ஜனாதிபதி

## இப்படிக் கூறுகின்றார் ராஜித சேனாரத்ன



உறங்கிக் கொண்டிருந்த யானைகளை எழுப்பி விட்டமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி செலுத்தியாக வேண்டும். ஜனாதிபதியின் உதவியின்றி இந்தளவு மக்கள் கூட்டத்தை திரட்டியிருக்க முடியாதென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை காலி முகத் திடலில் நடைபெற்ற – 'ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சியைத் தோற்கடித்த – வெற்றிக் கொண்டாட்டத்தில், உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

இதேவேளை, உறங்கிக் கொண்டிருந்த யானை எழும்பியதால் உண்டான விளைவே இதுவாகும். ஆனால் எழும்பிய யானைக்கு மதம் பிடித்தால் என்னவாகும் என இதுவரை யாரும் பார்க்கவில்லை.

ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து, எமக்கு ஆட்சியதிகாரத்தை வழங்கியிராவிடின் இதே காலிமுகத்திடலில் மதம் பிடித்த யானையின் செயற்பாடுகளை புரிய வைத்திருப்போம்.

இனி நாமிருக்கும் வரை மஹிந்த ராஜபக்ஷ மீளெழுச்சி அடைய முடியாது. எம்மோடு இணைந்து அரசாங்கம் அமைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

அதேபோன்று பொதுஜன பெரமுனவில் இருந்தும் அங்கத்தவர்களை எம்மோடு இணைத்துக் கொள்வோம். மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தினரை தனியாளாக்கி, நாம் ஒரு வலுவான கூட்டணியாக முன்வருவோம். – என்றார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.